தனிப்பிரதி விலை அணா 0—1—6

Reg. No. M. 3066. 1935-ஜூலை-1.

PAHUTHARIVU ("REASON")

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், (Ltd.,)

ஈரோடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், கதைகள், ஹாஸ்யங்கள், உலக விசேஷங்கள், சிறு கதைகளும் கிரமத்தில் வெளிவருவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் மே மாதம் முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக்குறிப்பிடவேண்டும்

விஷய அட்டவணை.	பக்கம்.
அறிவு வளர்ப்போம் (பாட்டு) (சாமி. சிதம்பரனார்)	1
எது உண்மை? அறிவா? மதமா? (டாக்டர். சி. எஸ். மு. அவர்கள்)	3
விதவைகளின் மறுமணம் (ஈ. வெ. ரா.)	7
பொது உடமை தத்துவத்தில் கலைகள் (ஈ. வெ. ரா.)	8
யார் பதிவிரதை?	11
சிரார்த்தம் (கைவல்யம்)	12
ஜாதி ஒழிப்பு (சுபாஷ் சந்திரபோஸ்)	17
ராம-ராவண ஆராய்ச்சி (சித்திரபுத்திரன்)	18
விபசாரம் பெருகுவதேன்?	28
அபங்கலீ சுமங்கலியானாள் (S. சிவப்பிரகாசம்)	29
புராண மரியாதைக்காரனுக்கும், சுயமரியாதைக் காரனுக்கும் சம்பாஷணை (சித்திரபுத்திரன்)	32
ஜீன் மெஸ்லியர் படத்திறப்பு,	38
தப்பித்துக்கொண்ட ஸ்தியாகியி (S C பாண்)	43
இந்து மதம் ஆண்மா? (புரோபசர். லட்சுமி நரசு B.A.)	51
கருச்சிதைத்த கடவுள் (சோதனை விளக்கு)	55
கடவுள் (ஈ. வெ. ரா.)	61

பகுத்தறிவு.

பகுத்தறிவு நாற்பதிப்புக் கழகத்தினின்று வெளிவரும் ஓர் மாத வெளியீடு,

—)o(—

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. | ஈரோடு 1935 ஜூலை 1. | இதழ் 3.

அறிவு வளர்ப்போம்.

(“பாரத தேசமென்ற பெயர் சொல்லுவார்” என்பது போல)

பல்லவி.

அறிவு வளர்ப்போம் நல்ல ஆண்மை பெறுவோம்
அன்பு வளர்ப்போம் மக்கள் துன்பம் ஒழிப்போம் (அறி)

சரணங்கள்.

1. காலமென்னும் பெருவெள்ளத்தன்னை எதிர்த்தால்—நாம்
கருதுகின்ற இன்பமொன்றும் பெற மாட்டோம்
கால தேச வர்த்தமானங் களுக்கேற்ப—நல்ல
காரியங்கள் செய்துயர்ந்த வாழ்வு பெறுவோம் (அறிவு)

2. பூமி தனில் உள்ளபொருள் யாவும் காண்போம்-உயர்
புதுமைகள் மெஞ்ஞானங் கொண்டு தெளிவோம்
நாமினிமேல் தெய்வீகப்பேச்சை நம்போம்-என்றும்
நடுநிலை நின்றுண்மைக் காட்சி காண்போம் (அறிவு)

3. நீலத்திரைமேல் உலவி நாடு காண்போம்—எங்கும்
நிற்கும் மலைத்தோற்றங்கண்டு புத்தி வளர்ப்போம்
மேலிருக்கும் வானில் ஒளிர் காட்சி காண்போம்—அதன்
மெய்மைகண்டு பகுத்தறி வாளர் ஆவோம் (அறிவு)

4. வழக்கத்தை விட்டுவிட மாட்டோம் என்றே—பிடி
வாதமிடும் மூடமதி கொல்லுவோமே
பழக்கமென வெறுஞ்செய்கை இனிச் செய்யோம்-கெட்ட
பாதை சென்று முட்டுபட்டுச் சாகமாட்டோம் (அறிவு)

5. முன்னவர்கள் செய்ததென்று முற்றும்
[கொள்ளோம்—பின்னர்
மூண்டசெயல் எனவொன்றும் தள்ளமாட்டோம்
என்னசெய லேனும் அதைச் செய்வ தாலே—பெரும்
இன்பம்வரும் ஆயின் அது செய்து வாழ்வோம் (அறிவு)

6. மண்குதிரை தன்னைநம்பி நீரில் இறங்கி—உயிர்
மாளும்பேதை மனிதரைப் போலவே நாம்
எண்ணில் பெரும் பொய்யுலகம் காட்டி நம்மை—என்றும்
இன்னல் செய்யும் சாத்திரங்கள் நம்பமாட்டோம் (அறிவு)

7. பாலர்மரப் பாச்சிகளைத் தூக்கி நின்றே—இந்தப்
பாரில்விளை யாடுவது போல நாமும்
மூலையெங்கும் கோவில்களைக்
[கட்டிப் பொம்மை—கொண்டு
மூடவிழாச் செய்துபொருள் நட்டம் பண்ணோம் (அறிவு)

8 மக்களொரு சாதியென கண்ணிற் கண்டும்—இந்த
மானிலத்திற் பலசாதி பேதம் செய்தார்
மிக்கமுழு மூடர்அவர் வார்த்தை நம்போம்—நாம்
மேன்மைபெற ஒன்றுபட்டு வாழு வோமே (அறிவு)

9. சாதிமத தேசநிற பேதம் நீக்கி—மக்கள்
சாதியொன்றே உண்மையென்று கொண்டு வாழ்வோம்
தீதுசெய்யும் காரியங்கள் முற்றும் நீக்கி—இன்பத்
திரைக்கடல் மூழ்கிவிளை யாடுவோமே (அறிவு)

10. துன்பமின்றி காமுலகில் வாழு மாறே—பல
தொழில்களும் யந்திரங்கள் கொண்டு புரிவோம்
இன்பசுவைத் தேனைவிட்டு வேம்பு நுகரோம்-மண்ணில்
எழும்விஞ் ஞானம்விட்டு மதங்கள் நம்போம் (அறிவு)

சாமி சிதம்பரனார்.

எது உண்மை? அறிவா? மதமா?

(டாக்டர் சி. எல். டி. அவாயின்)

புரோகித மயக்கம்.

சமயச் சடங்குகளினால் மோட்சம் கிடைக்கும் என்று, புரோகிதர்கள் பொதுமக்களைச் சுலபமாக நம்பும்படி செய்து விடுகிறார்கள். புரோகிதர் மொழியில் சந்தேகப்படுவது கூட மகா பாபம் என்றும் பலர் நம்புகிறார்கள். புரோகிதர்கள், தாம் சொன்னபடி நடக்காவிட்டால் "நரகம்" கிடைக்கும் என்று பயப்படுத்தி வெகு காலமாகப் பாமர மக்களை ஏமாற்றி வருகிறார்கள்; ஆகையால் பாமர ஜனங்களும் அவர்களுடைய வார்த்தகளைத் "தெய்வ" வாக்காக மதிக்கிறார்கள்.

பொது ஜனங்களில் மிகச்சிலரே யுக்தி வாதிகளின் பேச்சுக்குச் செவிசாய்க்கிறார்கள். சிலர், யுக்திவாதிகளின் பேச்சைகேட்டு, தாம் பகுத்தறிவுக்கு ஒத்தபடி நடக்க முடியாததை ஒரு பெருமையாகவும் பாராட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்த முயற்சி செய்பவர்களை "நாஸ்திகர்" என்றும், "துரோகிகள்" என்றும், மத நம்பிக்கையைக் கெடுக்கும் "பாபிகள்" என்றும் தூற்றுகிறார்கள். யுக்தி வாதிகள், விஞ்ஞான சாஸ்திரிகள், நாஸ்திகர்கள் முதலியவர்களின் வார்த்தைகளைக் கேட்கக்கூடிய மனிதர்களும் உலகத்தில் இருக்கிறார்களே என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அவர்கள், சீர்திருத்தக்காரர்களை ஒரு தருமபாக மதித்திருப்பாதாகப் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள், இத்தகைய மனப்பான்மையுடையவர்களுக்கு நற்புத்தி புகட்ட முயற்சிப்பது வீண் வேலையாகும்; அவர்களுக்குக்கூறும் புத்திமதிகள் "பைபிளில்" கூறப்பட்டிருப்பது போல் பன்றி முன் எறியும் முத்துக்களுக்கே ஒப்பாகும்.

குருட்டு நம்பிக்கைகள்.

அனேகர் விஷயங்களின் உண்மைகளை ஆராய்ந்தறிய முடியாதவர்களாயிருக்கிறார்கள். சிலர் ஆராய விருப்பம்

இல்லாதவர்களாகவே யிருக்கிறார்கள். குருட்டு நம்பிக்கைகளையும் அநாச்சாரங்களையும் பின்பற்றும் மக்களைக்குறை கூறுவதிலும் பயனில்லை. அவர்கள் பிறந்த காள் முதல் இந்த குருட்டு நம்பிக்கைகளில் பழக்கப்பட்டு வந்ததனால், அவை அவர்களுடைய உயிருடன் வளர்ந்துவிட்டன.

மதபோதனைகளில் சந்தேகங்கொள்ளக்கூடாது என்றும், அவைகளைப்பற்றிக் கேள்விகள் கூட கேட்கக்கூடாது என்றும், எச்சரிக்கப் பட்டிருப்பதனால் விஷயங்களின் உண்மையை அறிய அவர்கள் முன் வருவதில்லை. இப்படிப்பட்டவர்களுக்கு உண்மை அறிவை ஊட்டுவது மகிழ்ச்சி தரத்தக்க வேலையேயாகும். உண்மையை அறிய ஆவலுடையவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுவது நமது கடமையாகும்.

சாஸ்திரங்களில் கூறப்படுபவைகள் எல்லாம் உண்மையென்றும், அதன்படி நடந்தால் "மோட்சம்" கிடைக்கும் என்றும் நமது முன்னோர்கள் தவறாக நம்பினார்கள் எனவும் காமும் அதேமாதிரி அந்தக்குருட்டு, நம்பிக்கைகளைப்பின் பற்றக்கூடாது எனவும் காம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

தப்பெண்ணத்தினாலேயே ஒன்றுக்கொன்று முரண்பாடான மதக்கொள்கைகளை காம் பின் பற்றுகிறோம். உலகத்தைப்படைத்த "கடவுள்" ஒருவர் இருக்கிறார் என்றும், உலக மக்களைக்காப்பாற்றும் பொறுப்பு அவருடையது என்றும், இறந்த பின் ஜீவர்கள் "சுவர்க்க காக"ங்களை அடைகிறார்கள் என்றும், உலகத்தை ஆக்கி அழிப்பதே அவருடைய வேலை என்றும், நமது முன்னோர்கள் உண்மையாகவே கம்பி வந்தார்கள். இந்த நம்பிக்கைகள் எல்லாம் தவறாக இருக்கக் கூடும் என்று அவர்கள் ஒரு பொழுதும் எண்ணியதே இல்லை; இந்த நம்பிக்கைகள் மோசமானவைகள் என்றும், ஆதாரம் அற்றவை என்றும் அவர்கள் நினைத்ததில்லை.

"கடவுள்" அருள் பெற்ற "அவதார" புருஷர்களே, கடவுளின் உண்மையை உணர்ந்து மதங்களை உண்டாக்கினார்கள் என்று எல்லா மதங்களும் கூறுகின்றன. இதற்கு ஆதாரமாக ஒவ்வொரு மதங்களுக்கும் தனித்தனியே வேதங்களும் இருந்து வருகின்றன. தங்கள் மதத்தைப்பரவச்செய்ய எல்லா மதத்தினர்களும் கோயில்களும் பிரார்த்தனை மண்டபங்களும் கட்டியிருக்கிறார்கள்.

இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வசித்த நமது மூதாதைகளின் அறிவுக்குத்தகுந்தபடி அம்மத க்கொள்கைகள் அமைந்திருந்தன. நமது மூதாதைகளின அறிவு தப்பெண்ணங்களால் உண்டானது என்று மெய்ப்பிக் கப்பட்டால், அந்த தப்பெண்ணங்களை அஸ்திவாரமாகக் கொண்ட மதங்களும் பொய்யானவை என்று ஏற்பட்டுவிடும் அல்லவா?

மதமும் விஞ்ஞானமும்.

நம்மவர்களில் பெரும்பாலோர் விஞ்ஞான சாஸ்திரம் என் றால் இன்னதென்று அறியாதவர்கள். இந்த பிரபஞ்சத்தைப் பற்றியும், பூமியைப்பற்றியும், ஜீவகோடிகளைப்பற்றியும், பாவம், புண்ணியம், ஆசாரம், கல்லொழுக்கம் முதலியவைக ளைப்பற்றியும் விஞ்ஞான சாஸ்திரம் என்ன சொல்லுகிறது என்பதைப்பற்றியும், நம்மவர்களில், தங்களைப்பெரியவர்க ளாக நினைத்துக்கொண்டிருக்கிறவர்களும் அறிய மாட்டார் கள்.

உதாரணமாகக் கிறிஸ்து மதத்தை எடுத்துக்கொள்ளு வோம்; இதை விளக்குமுன் நான் ஒரு விஷயத்தை வாசகர்களு க்கு வலியுறுத்த விரும்புகிறேன். நான் கிறிஸ்து மத போத கன் அல்ல; உரோமன் கத்தோலிக் மதம் எனக்குப் போதித்த வைகளையே நான் ஆராய்ச்சி செய்கிறேன். அம்மத போத னைகள், விஞ்ஞான சாஸ்திரத்துக்கு எவ்வாறு முரண்படுகின் றன என்பதை விளக்குகிறேன்.

கிருஸ்து மத போதனைகள் முற்றும் உண்மையானவை கள் என்று கூறுவதானால், பூகர்ப்ப சாஸ்திரம், வான சாஸ் திரம் முதலியவைகள் பொய்யாக வேண்டும் இவை இரண் டும் ஏககாலத்தில் உண்மையாக இருக்க முடியாது. கிறிஸ்து மதக்கொள்கைகளையும், விஞ்ஞான சாஸ்திர உண்மைகளை யும் ஒன்று படுத்திக் காட்டப் பலர் பலவிதமாக முயற்சி செய் வதையும் நான் அறிவேன்.

கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம், யூத மதம் முதலிய மத ங்களின் கொள்கைப்படி சுமார் 6000 வருஷங்களுக்கு முன் தான் கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தாராம். பிரபஞ்சத் தையும், மனிதர்களையும், விலங்குகளையும், புல் பூண்டுகளை யும் ஆறு நாட்களில் படைத்தாராம்.

ஆதி மனிதனும், அவன் விலாவிலிருந்து கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபெண்ணும், கடவுளினுடைய ஆணையைமீறி யதனால், கடவுளுக்கு அவர்கள் பேரில் கோபம் உண்டாயிற் றாம். உடனே அவர்களைச்சபித்து மோட்ச உலகத்திலிருந்து விரட்டி விட்டாராம். அவர்கள் செய்த பாவம் அவர்களிட மிருந்து தோன்றிய மக்களையெல்லாம் பிடித்துக்கொண்ட தாம். ஜீவகோடிகளின் பாவத்தைத் தீர்க்கும் பொருட்டுக் கடவுளே உலகத்தில் எசுநாதராக அவதாரம் செய்தாராம். தனது இரத்தத்தைச்சிந்தி மக்களுக்குப்பாப விமோசனம் செய்தாராம். அவரை எதிரிகள் கொன்றார்களாம். புதைக்கப் பட்ட பிறகு மீண்டும் உயிர்த்தெழுந்து சுவர்க்கத்தே அடைந் தாராம் என்று இப்படியாகவெல்லாம் கிறிஸ்து மதம் போதி கின்றது. இந்த நம்பிக்கையே கிறிஸ்து மதத்துக்கு ஆதார மாக இருந்து வருகிறது. பாவ மன்னிப்புக்கும், மீட்புக்கும் இந்த நம்பிக்கையே காரணமாக இருக்கிறது.

பூகர்ப்ப சாஸ்திரங்களோ 6000 வருஷங்களுக்கு முன் தான் பூமி சிருஷ்டிக்கப்பட்டது என்பதை மறுக்கிறது. கிறிஸ்து மதம் போதிக்கிறபடி மனிதன் தோன்றவில்லை என்றும, விஞ் ஞான சாஸ்திரம் கற்பிக்கிறது. இம்மாதிரியான மதக்கொள் கைகளின் போலித்தன்மைகளை அறிய வேணடுமானால், பூமி சாஸ்திரம், வான சாஸ்திரப், ஜீவவர்க்க சாஸ்திரம், உடற் கூறு சாஸ்திரம் முதலிய நூல்களின் உண்மையை ஆராய்ந் தால் கண்டு கொள்ளலாம்.

விஞ்ஞான சாஸ்திரம் தோன்றி நூறு வருஷம் கூட ஆக வில்லை. விஞ்ஞான சாஸ்திர அறிவு தோன்றுவதற்கு முன்பு, மதாசிரியர் எல்லோரும் தங்கள் இஷ்டப்படி போத னை செய்து வந்தார்கள். கல்வி, கேள்விகளில் தேர்ச்சி பெற் றவர்கள் கூட மதாசிரியர்களின் போதனைகளைப்பற்றி சந்தேகித்துக் கேள்வி கேட்கவில்லை; மத உண்மைகளை ஆராய்ச்சி செய்ய முயலவும் இல்லை. எனவே பாமர மக் களுக்கு மதத்தில் கொஞ்சங் கொஞ்சம் நம்பிக்கை இருந்து வருகிறது. மதாசிரியர்கள் இப்பொழுது என்னதான சப்பைக் கட்டு கட்டினாலும் சரி மதங்களின் குட்டு அவர்களுக்கு இனி வெளிப்பட்டு அதனால் மதங்கள் அழியப்போவதும் உறுதி; ஏனென்றால், எங்கும் விஞ்ஞான சாஸ்திர ஞானம் உதயமாகிப் பகுத்தறிவு உணர்வு பெருகிக்கொண்டு வருகிறது.

விதண்டா வாதம்.

ஈ. வெ. ரா.

குசேலருக்கு 27-பிள்ளைகள் பிறந்தது. குடும்பம் பெருத்துவிட்டது. அதனால் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் திண்டாடினார் என்று புராணக்கதை சொல்லுகிறது. குசேலர் பெண்சாதி குறைந்தது வருஷத்திற்கு ஒரு பிள்ளையாகப் பெற்று இருந்தாலும் கைக்குழந்தைக்கு ஒரு வருஷமாயிருக்குமானால் மூத்த பிள்ளைக்கு 27 வருஷமாவது ஆகியிருக்க வேண்டும். ஆகவே 20 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் 7 போராவது இருந்திருப்பார்கள்? இந்த 7 பிள்ளைகளும் ஒரு காசுகூட சம்பாதிக்காத சோம்பேறிப் பிள்ளைகளாகவா இருந்திருப்பார்கள்? 20 வருஷத்திற்கு மேம்பட்ட பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு பிச்சைக்குப்போக குசேலருக்கு வெட்கமிருந்திருக்காதா? அல்லது இந்தப் பிள்ளைகளுக்காவது மான அவமானமிருந்திருக்காதா? அல்லது பிச்சை போட்ட கிருஷ்ண பகவானுக்காவது, "என்ன? பெரிய பெரிய வயது வந்த பிள்ளைகளைத் தடிப்பையல்களாட்ட மாய் வைத்துக்கொண்டு பிச்சைக்கு வந்தாயே வெட்கமில்லையா?" என்று கேட்கக்கூடிய புத்தி இருந்திருக்காதா?

* * *

கேள்வி:—என்னடா உனக்கு கடவுள் இல்லையென்று சொல்லுகின்ற அளவு தைரியம் வந்துவிட்டதா?

பதில்: அவர்தான் மனோவாக்குக்காயங்களுக்கு எட்டாதவரென்று சொன்னாயே! அவரை நான் உண்டு என்று சொன்னால் நீயே உனக்கு, எப்படித் தெரியும்? என்று கேட்பாயே! அதனால்தான் என் புத்திக்கு எட்டாததையும் தெரியாததையும் நான் ஒப்புக்கொள்வதில்லை என்று சொல்லிவிட்டேன். இதில் என்ன தப்பு?

* * *

கேள்வி:—கடவுள் கருணாநிதி அல்லவா?

பதில்:-கடவுளே நமது மனதுக்கும், காயத்துக்கும் எட்டாதவராயிருக்கும்போது அவர் கருணாநிதி என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?

பொது உடமை தேசத்தில் கலைகள்.

(ஈ. வெ. ரா.)

பொது உடமை தத்துவம் பெருகி மக்கள் சமதர்மக் கொள்கைக்கு ஆளாகிவிட்டால், எல்லோரும் சோம்பேறிகளாக ஆகிவிடுவார்கள் என்றும், கலைகள் விருத்தியாகாதென்றும், அற்புதங்களும் அதிசயங்களும் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுமென்றும், உற்சாகமற்ற வாழ்க்கையாக ஆகிவிடுமென்றும், உலக முற்போக்கே தடைப்பட்டு விடுமென்றும், பொதுவாக மனித சமூகத்தின் அறிவே மங்கிவிடுமென்றும் சொல்லப்படுகின்றது.

இன்று உலகில் பொது உடமை தேசமாகவும் சமதர்மக் கொள்கை ஆட்சி புரியக்கூடியதாகவும் இருந்து வரும் நாடு ரஷ்ய தேசமாகும்.

அது 81. சதுர மயில் விஸ்தீர்ணமும் 17½ கோடி ஜனத் தொகை கொண்டதுமான தேசமாகும். அத்தேசம் தனி உடமைத் தத்துவத்தின் கீழ், சமதர்மம் என்கின்ற வாசனையே அற்று, உயர்வு தாழ்வு தத்துவத்தில் வெகு காலமாக இருந்து வந்திருக்கிறது.

அப்படி இருந்தும் அந்த தேசம் ஏறக்குறைய ஒரு காட்டுமிராண்டி தேசம் போலவே, இந்தியாவை விட மோசமான நிலைமையில் சமீப காலம் வரை இருந்து வந்திருக்கிறது. 1917-ஆம் வரு-க்கு முன் அந்நாட்டு மக்கள் 100-க்கு 8-பேர், பத்துப்பேர்களே படித்திருந்தார்கள்.

ராமாயணம் நடந்தது திரேதாயுகத்தில். அதில் ராவணன் அரைக்கோடி வருஷம் (50-லக்ஷம் வருஷம்) அரசாண்டான் என்று காணப்படுகிறது.

அந்த யுகத்திற்கு மொத்த வருஷமே 12 லக்ஷத்து 96 ஆயிரம் வருஷங்களாகும். நாலு யுகமும் சேர்ந்தாலுமே 43 லக்ஷத்து 20 ஆயிரம் வருஷந்தான் ஆகிறது.

ஆகவே ராவணன் எப்படி அரைக்கோடி வருஷம் அரசாண்டு இருக்கமுடியும்?

மூக்குக்கண்ணாடியைப்பார்த்து ஆச்சரியப் படும்படியான நிலையில் கோடிக்கணக்கான மக்கள் இருந்தார்கள். மகாயுத்தம் நடந்ததை உணர முடியாமலும், உலக நடப்பில் கொஞ்சம் கூட தெரிந்து கொள்ள முடியாமலும் கோடிக்கணக்கான மக்கள் இருந்திருக்கிறார்கள். பல ஜாதி, பலமதம் என்பதாகப்பிரித்து ஒற்றுமையே இல்லாமல் இருந்து வந்தார்கள்.

இன்று ரஷிய தேசம் பொது உடமைத் தத்துவத்துக்கு வந்த,—சமதர்மக்கொள்கைப்படி ஆட்சி புரிய ஆரம்பித்த இந்த 18-வருட காலத்தில் உலகத்தில் கலைகளில் முதன்மை ஸ்தானம் பெறப் பார்க்கிறது. ரஷியக் கலை வளர்ச்சியும், அதன் முற்போக்கும் இன்று வேறு எந்த தேசத்திலும் அவ்வளவு வேகமாக நடைபெற வில்லை என்றே சொல்லவேண்டும். இலக்கியம், சித்திரம், நடனம், சங்கீதம், நாடகம், ஆகியவைகளில் ரஷியாவுடன் போட்டி போட மற்ற தேசங்களில் அனேகம் பயப்படுகின்றன. போர்த்திறத்தில் ரஷ்யாவைக்கண்டு மற்ற தேசங்கள் பயப்படுகின்றன என்று சொன்னால் அதை மறுக்க இன்று எத்தேசத்துக்கும் தைரியமில்லை. வைத்திய விஷயத்தில் செத்தவனைப்பிழைக்க வைத்தல் முதலான அனேக காரியங்களில் உலகத்தில் முதன்மை பெற்றுவருகிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக ரஷியா எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியே அது இன்று எல்லாத் துறைகளிலும் உலகத்தைப் பின்னடையச்செய்கிறது.

அதாவது ரஷிய சோவியத் அரசாங்கமானது ஆராய்ச்சித்துறையில் வேலை செய்து புதிய புதிய விஷயங்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதற்கு முதல் தர விஞ்ஞான நிபுணர்களாக (30000) முப்பது ஆயிரம் பேர்களைத் தெரிந்தெடுத்து அதற்கு "இன்வெஸ்ட் கில்ட்" என்று பெயர் வைத்துக் காரியங்கள் செய்யச்செய்து வருகிறார்கள். இந்நிபுணர்கள் இதுவரை அனேக அற்புதங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இன்னும் அனேக விஷயங்கள் கண்டு பிடிக்க உறுதி கொண்டு நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

கை விரல் நசுங்கித்துண்டு பட்டுவிட்ட ஒருவனுக்கு அவன் கால் விரல் ஒன்றை வெட்டி தைத்துப்பொருத்தி இயற்கையான கை விரலாகச் செய்யப்பட்டது.

குருடர்கள் கண்களுக்கு மின்சார சக்தி ஏற்றுவதன் மூலம் வெளிச்சம் வரும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஒரே

கம்பியில் ரயில் வண்டியைத் தாங்கும்படி செய்து பிரயாணி களை ஏற்றிக்கொண்டு மணிக்கு 185-மைல் வேகம் ஓடும்படி செய்யப்பட்டிருக்கிறது.

செத்த பிராணிகளை அதாவது பனியில் மூழ்கி உறைந்து உயிர் துறந்த பிராணிகளை 2, 3, 4 மாதகாலம் பொறுத்து உயிர் வரும்படி செய்யப்பட்டிருக்கிறது. ரத்தத்தை வெளியிலெடுத்ததும் மறுபடியும் சரீரத்துக்குள் பாய்ச்சப்படுகிறது.

கம்பளங்களுக்கு ஜந்துக்களின் மயிர்களை வெட்டாமல் தானே உதிரும்படி செய்து மறுபடியும் சீக்கிரம் முளைக்கும்படி செய்யப்படுகிறது.

பூமி விவசாய ஆராய்ச்சியில் பெரியதொரு மாற்றமும் பயனும் ஏற்படும்படியாக பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றது.

இன்னும் பல காரியங்கள் நடக்கின்றன. எனவே கலை வளர்ச்சி, அதிசயம், அற்புதங்கள் கண்டு பிடித்தல், முயற்சி, விஞ்ஞான முன்னேற்றம் முதலியவைகள் எல்லாம் தனி உடமை நாட்டில் தான் ஏற்படும் என்று சொல்லுவதானது தனி உடமை பணமே சுயநலம், பணமே வேலைக்கு பிரதி பலன் என்ற தான பழக்கத்தினால் ஏற்படும் மனப்பான்மையே தவிர, அவை இயற்கையாகத் தோன்றுவதல்ல. பணமில்லாத போட்டி விளையாட்டுகளில், பந்தயங்களில் மக்கள் இறங்கி வேலை செய்வதையும் பண வருவாயில்லாத காரியத்துக்கு மக்கள் பலர் உயிர் விடும்படியான அளவு முயற்சி செய்வதையும், உயிரையே இழப்பதையும் கூட பார்க்கின்றோம். இவர்களுடைய லக்ஷியம் என்ன என்று பார்த்தோமேயானால் சமதர்ம நாட்டில் போட்டியும், பந்தயமும், அதற்காக உற்சாகமும் வளக்கமும் என் இருக்காது என்பது விளங்கும்.

நிற்க ஒரு மனிதன் இரண்டு மனிதர்களால் செய்யப்படுகின்ற காரியங்கள் போக, 1000-பேர் 10000-பேர், 100000-பேர்களால், ஒரு வருஷம், பத்து வருஷம் பாடுபட்டு, 10-கோடி ரூ, 20-கோடி ரூ, செலவிட்டுச் செய்யவேண்டிய அதிசயமான காரியங்கள் எல்லாம் பெரிதும் சமதர்ம நாட்டில் தான் செய்யமுடியும்.

ஏனெனில், சமதர்ம நாட்டில் உள்ளதை விகிதாசாரம் சாப்பிட்டு விட்டு, முடிந்ததைக்கூலி இல்லாமல் செய்வது என்

யார் பதிவிரதை?

1. சீதா என்பவள் தன் புருஷன் அதிக கட்டுத்திட்டம் காவலாய் இருந்து வந்ததால் வேறு புருஷனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியவில்லை.

2. மீனாட்சி என்பவள் தன் புருஷனுக்கு விஷயம் தெரிந்தால், உதைத்துக் கொன்று விடுவானே என்று பயந்து வேறு புருஷனை வறிட்டுக்கூட பார்க்கவில்லை.

3. கமலா என்பவள் ஊர் ஜனங்கள் கேவலமாய்ப் பேசுவார்களே என்ற மானத்துக்குப் பயந்து இதர புருஷனுடன் பேச்சு வார்த்தை கூட வைத்துக்கொள்ளவில்லை.

4. ரஞ்சிதம் என்பவள் ஒரு புருஷனுடன் சாவகாசம் செய்துகொண்டு இருப்பது உடலுக்கு கல்லது என்று கருதி, பிற புருஷனைப்பற்றி நினைப்பதே இலை.

5. பத்மாவதி என்பவள் வேறு புருஷர்கள் தன் மனதுக்குப் பிடிக்காததினால் யாருக்கும் இணங்கவில்லை.

6. பாலாம்பாள் தான் கேட்ட அளவு பணம் கொடுக்காததால் எல்லோருக்கும் சம்மதம் கொடுக்க மறுத்து விடுவாள்.

7. கோகிலா என்பவள் தன் கணவனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தால் புருஷன் தவறுகின்ற வரையில் தானும் தவறுவதில்லை என்று ஓரே பிடிவாதமாய் பிற புருஷரை இச்சிக்காமல் இருந்தாள்.

8. சரஸ்வதி என்பவள் தன்னை மேல் லோகத்தில் செக்கில் போட்டு ஆட்டுவார்களே என்று பயந்து, வந்த கிராக்கிகளையெல்லாம் திருப்பி விட்டாள்.

9. சௌந்தரி என்பவள் தான் அவலக்ஷணமாய் இருந்து கொண்டு, ஒருவரும் தன்னை விரும்பாததால் அவளுக்கு பிற புருஷ சம்பந்தம் வைத்துக்கொள்ள சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது.

10. லக்ஷ்மி என்பவள் தான் பதிவிரதைகள் லிஸ்ட்டில் தாக்கல் ஆக வேண்டும் என்கின்ற ஆசையால் வெகு கஷ்டத்துடன் வேறு எவருடைய வேண்டுதலையும் மறுத்து விட்டாள். இந்தப்பதின்மரில் யார் பதிவிரதை?

பதால் எப்படிப்பட்ட வேலைக்கும் மூலதனக்கவலையோ வட்டிக்கணக்கு பார்க்க வேண்டிய அவசியமோ இல்லாமல் போய்விடுகிறது. ஆதலால் சமதர்ம மக்கள் வாழ்க்கை எழுச்சி உள்ளதும், ரசமுள்ளதுமாக இருக்காது என்று யாரும் எண்ணிவிட வேண்டியதில்லை.

சிராத்தம்.

(கைவல்யம்)

"ஊக முளதேல் சிறியவர் உரையும் மேற்கொள்க" என் பது பெரியவர்கள் கூறும் நியாயம் ஆதும் எது சரி. எது தப்பு, என்னும் ஆலோசனையின் மூலம் நிச்சயிக்கும் புத்தி யில் பட்டதைத் தைரியமாகச் செய்கிறவனுக்குப் புத்திமான் என்று பெயர். பழய வழக்கத்தை மாற்றுவதில் பயமோ சுற்றியிருக்கும் அறிவில்லாதவர்களின் சொல்லில் தாட்சண்ய மோ வழக்கத்தில் தோய்ந்த மனதைச் சரிப்படுத்தும் திடமில் லாத கோழைத்தனமோ கம்மிடம் குடிகொண்டிருப்பதனால் தான் அறிவாளிகள் கமமை 'நிச்சய புத்தியின் வழி தூர்ந்த வர்கள்" என்று சொல்லுகிறார்கள். மேல்காட்டு ராஜதந்திரி களும் கம்மைத்திறமை இல்லாதவர்கள் என்று சொல்லுவதற் குக்காரணமும் இதுதான்.

உதாரணமாகப் 'பிதிர்க்கடமை" என்ற விஷயத்தில் காம் கொண்டிருக்கும் பிடிவாதமான மூடக்கொள்கைகளைக் கொஞ் சம் விசாரிக்கும் புத்தியுடன் கவனித்தால் கமது புத்தியற்ற தன்மை நன்றாக விளங்கும் இப்பொழுது பிதிர்க்கடமை களில் கருமாந்திரம், பிண்டம் போடுவது முதலியவைகளை விட்டு விட்டுச் "சிராத்தம்" என்பதைப்பற்றி மட்டும் கவனிப் போம்.

சிராத்தம் என்பது சிரத்தையோடு செய்வது சிராத் தம், திதி திவசம், வீட்டுச்சாமி கும்பிடுவது, கூரைக்குச் சோறு போடுவது, பெரியோர்களுக்குப் படைத்தல், வருஷாந்தரம் இவையனைத்தும் ஒரு பொருட் சொற்கள்.

இறந்து போனவர்களுடைய இறந்த வருடக்கடைசியில் இறந்த மாதமும், திதியும் வரும் காளில் ஒன்றோ, மூன்றோ, இருபத்தொன்றோ ஒற்றை எண்ணுடைய பார்ப்பனரைக்கூப்பிடு வது; இலையில் அரிசி, உப்பு முதல் எல்லாச்சாமான்களையும் நிரப்புவது; புரோகிதனால் ஓமம் வளர்க்கச்செய்து, பிண்டம் அமைப்பது; அவனுக்கும் நமக்கும் தெரியாதனவும், நிச்சயம் இல்லாதனவுமானவைகளைச் சடங்கென நடத்திக் காண்பிப்

பது புரோகிதன்; வேஷ்டி, செம்பு, குடை, விசிறி தெட்சணை முதலியனவைகளை வாங்கிப்பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு மறுபடியும் அவனுக்கும் கமக்கும், தெட்ணைத் தகாறும், சாமான் சரியில்லை என்னும் வாதமும், முகக்கடு கடுப்பும், அலட்சியமும், அரைகுறைச் சமாதானமும் கடப்பது; ஆகிய காரியங்களுடன் சிரார்த்தம் முடிகிறது.

சிரார்த்தத்துக்கு மந்திரம் சொல்லும்போது கதிகளின் பெயரும் தேசத்தின் பெயரும் சொல்லி, "சமித்தால் அக்கினி மூட்டப்பட்டிருக்கிறது. நெய் ஊற்றுகிறேன். அக்கினி எரிகிறது. எல்லாச்சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தெட்சணை வைத்தாய் விட்டது. தெர்ப்பை பிடித்த கையால் எள்ளையும் தண்ணீரையும் இறைக்கிறேன்." என்ற கருத்துடன் மந்திரம் சொல்லப்படுகின்றது. இதனால் "பிதிர்த்தேவதைகள்" என்பவர்கள் திருப்தியடைகிறார்கள் என்று கருதப்படுகின்றது.

சமஸ்கிருத பாஷையில் மந்திரம் சொல்லுவதால் உங்களுக்கு அர்த்தமாவதில்லை. தகப்பனுக்குச் சிரார்த்தஞ் செய்கையில், புரோகிதன் உயிரோடிருக்கும் தாயார் பெயரைச் சேர்த்தும், தாயாருக்குச் சிரார்தகம் செய்கையில் உயிரோடிருக்குந் தகப்பன் பெயரைச் சேர்த்தும் சில சமயங்களில் சொல்லிவிடுகிறான். அது தெரிந்து தடுக்கப்பட்டால் ஆ! ஆ!! அப்படியா! என்று திருத்திக்கொள்ளுகிறான்.

என் உயிரோடிருப்பவர்களுக்குச் "சிரார்த்தம்" செய்துவிடுகிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியாது, உங்களைக்கீழானவர்கள் என்றும், மந்திரத்தின் அர்த்தம் தெரியாதவர்கள் என்றும், அனேக காலாக அவன் நினைத்துக்கொண்டிருப்பதும், இந்த நினைப்பு அவன் இரத்தத்துடன் ஊறிப்போயிருப்பதுமான அலட்சியமே காரணமாகும். அவன் உங்களிடம் உடம்பைக்குறுக்கிப் பல்லைக்காட்டுவதெல்லாம் பணத்திற்காகத்தான்.

மந்திரத்தை நாம் கேட்கக்கூடாதென்றும், அவர்கள் சொல்லக் கூடாதென்றும் கூறப்படுகின்றது. மந்திரத்தின் அர்த்தம் தெரியாமல் கர்மங்கள் செய்வதால் பலனில்லை என்றும் அவர்கள் தான் சொல்லுகிறார்கள். பின்னை ஏன் நம்மால் சொல்லமுடியாத, தெரிந்துகொள்ளமுடியாத, கடைக்குத்

தெரியாத பாஷையில் மந்திரம் சொல்லவேண்டும்? நமது பாஷையில் சொன்னால் செய்யும் காரியம் "பிதிர்த்தேவதை" க்குப் போய்ச்சேராதா? நமது பாஷை தெரியாத "தேவதை" க்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?

"கங்கை, யமுனை, பாதகண்டம், பாரத வருஷம், பிண்டம், தெட்சணை ஓமம் எல்லாம் வைத்திருக்கின்றன" என்னும் சிராத்த மந்திரத்தை அவரவர்களுக்குத் தெரிந்த பாஷையில் சொல்லிவிட்டால் புரோகிதப்புரட்டு வெளியாய்விடும். நமக்கும் "பிதிர்த்தேவதை" க்கும் புரோகிதனுக்கும் "மேலான கடவுளுக்கும்" உள்ள சம்பந்தம் வெளிப்பட்டுவிடும். நமது அரசர் அன்னிய பாஷைக்காராராயிருந்தாலும், ஸ்தலஸ்தாபனங்களிலாவது அவரவர் பாஷைகளை உபயோகித்துக்கொண்டு வருகிறோம். ஆனால் புரோகிதர் சொல்லும் அன்னிய பாஷைப்பேய், சுடுகாட்டு மந்திரத்தில் கூடச்சுதந்தரம் கொடுக்க மாட்டேன் என்கிறது.

பிராமணனும் "திதி செய்கிறானே என்றால் அது பிறரை ஏமாற்றுவதற்காகவே. அந்தக்காலத்துப் பிராமணன், நிலபலங்களுடனும், மாட மாளிகைகளுடனும் வசித்ததில்லை. எதேனும் காரணம் சொல்லிப்பிச்சையெடுத்துப் பிழைக்க வேண்டிய நிலையில் இருந்தான். ஆதலால் தனக்கு வேண்டிய குடும்ப சாமான்களைச் சேகரம் பண்ணிக் கொள்ளுவதற்குத் "திதி"யை ஒரு கல்ல மார்க்கமாகக் கைக்கொண்டான்.

காம் செய்யும் "திதி" யைப் "பிதிர்த்தேவதை" ஏற்றுப் பிதிர்க்களுக்குக் கொடுக்கிறது என்று சொல்லுகிறார்கள். சிராத்தத்திற்கு முக்கியமாக மதுமாமிசம் வேண்டும் என்பது சிராத்த கர்மங்களின் விதி. ஆடுமாடுகளை வெட்டிச் சிராத்தம் செய்வது புத்தருடைய காலத்திற்குப் பின் சிறுகச்சிறுகின்று விட்டது.

மாட்டைப்பற்றி உங்களுக்குச் சந்தேகம் இருக்கலாம். "யாகப்பசு" என்பதற்கு வெள்ளாடு என்று இப்பொழுது அர்த்தம் சொல்லப்பட்டாலும் பசு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே; அதாவது பெட்டை மாடு.

"சிராத்தம்" ஏற்பட்ட காலத்தில் சாமக்கிரியைகளில் முக்கியமானவை மதுவும் மாமிசமுமாகும். இப்பொழுதோ அப்படியில்லை. முன்னால் ஏற்பட்ட "பிதிர்த்தேவதை"

க்கு இப்பொழுது செய்யும் சிரார்த்தம் எப்படி திருப்தியைக் கொடுக்கும்? மனிதன் சீர்திருத்தம்போல் பிதிர்த்தேவதை யும் மாறியிருக்குமா? அப்படியிருக்க நியாயம் இல்லை. ஒரு சதுர் யுகம் கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாம். இப்பொழுது கலியுகத்துக்கு வயது 5-ஆயிரத்துச்சில்லரை வருடமே கணக்குப்போட்டுப்பார்த்தால் சிரார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் "பிதிர்த்தேவதை" பட்டத்துக்கு வந்து தேவ வருடத்தில் இரண்டு நிமிஷங்கூட ஆகவில்லை. இந்த நிமிடத்திற்குள்ளாகவா "கடவுள்" என்பவர் "பிதிர்த்தேவ தை"யை மாற்றியிருப்பார்? இதை உத்தேசிக்கையில் நாம் இப்பொழுது செய்யும் சிரார்த்த கர்மங்கள் பிதிர்த்தேவதைக் குத் திருப்தியை உண்டு பண்ணாது.

புரோகிதன், சிரார்த்த வீட்டில், சிரார்த்ததினத்தன்று எல் லாவித ஆகாரங்களையும் சாப்பிட்டுத் திருப்தியடைய வேண் டுமென்பது முக்கிய விதிகளில் ஒன்று. இப்பொழுது புரோகிதர் கள் சாப்பிடுவதில்லை. எல்லாவித சாமான்களையும் வீட்டிற் குக் கொண்டுபோய் சமைத்துச் சாப்பிடுவதாக அவர்கள் பாவனை செய்கிறார்கள். நாமும் அதற்குச் சம்மதித்துச் சாமான்களைக்கொடுத்து அனுப்புகிறோம். ஒரு வீட்டுத்தி யாய் இருந்தால் சரி; ஒன்பது வீட்டு இழுவாயிருந்தால் புரோ கிதன் என்ன செய்வான்? கொடுக்கும் சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டு போய் தனக்கிஷ்டமான சுக தேவனுதகளுக் குக்கொடுத்தும், விற்றும் பாழாக்குவதைத்தவிர வேறு என்ன தான் செய்வான்?

மதக்காரர்கள் சொல்லுகிறபடி, நமது பிதுர்க்கள் "நரக" த்திலோ அல்லது "சுவர்க்க"த்திலோ, அல்லது "மறுஜென்ம"த்திலோ, இருக்க வேண்டும்; அல்லது உலோகாயுத மதம் சொல்லுகிறபடி பூதத்தோடு பூதமாகக் கலந்திருக்க வேண் டும். நரகத்திலிருப்பவனுக்கு இந்த அரிசியும் பருப்பும், தெட் சணையும் போய்ச்சேருவது எப்படி? "காமதேனு" "கற்பக விருட்சம்" முதலியவைகள் உள்ள சுவர்க்கத்தில் இருப்பவ னுக்கு இந்த எள்ளுந்தண்ணீரும் எதற்கு? மறுஜென்மம் எடுத்தவனுக்கு இந்த கர்மத்தால் என்ன பலன்? பூதத்தோடு பூதமாகக்கலந்தவனுக்கு எதுவும் வேண்டியதில்லை. பின் எதற்காகப் புரோதனுக்குக் கொடுக்க வேண்டும் என்னும் கேள்விக்குச்சரியான பதில் வேண்டும்.

பிதுர்க்கள் இருக்கிறார்களா? இல்லையா? இருந்தால் எங்கிருக்கிறார்கள்? என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

னன்பது யாருக்குத் தெரியாத ரகசியம். (புரட்டு) பிதிர்க்களுக்காகப் பார்ப்பனருக்குத் தானம் கொடுப்பது முட்டாள் தனம் என்பதற்காகவே, திருவாத்தான் (தெனாலிராமன்) பார்ப்பனர்களுக்குச் சூடு போட்டதாகக் கதை வழங்கி வருகிறது. இந்தக் கதை வெகு காலமாக நமது காட்டில் வழங்கி வருகிறது. நாமும் பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறோம். இன்று நமது பிள்ளைகளும் படித்துக்கொண்டு வருகின்றார்கள்.

ஆதலால் இந்த புத்திக்குப் பொருந்தாத கற்பனைகளையெல்லாம் பார்க்கும்போது, தன் காரியமே பிரதானமானது என்று நினைக்கும் ஒரு குறுகிய ஜன சமூகம் (புரோதர் கூட்டம்) நமது தேசத்தை அனேக காலாக அடிமேல் அடியடித்துக் கீழே தள்ளியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; மதத்தின் பெயரால் பலவிதமான கர்மங்களை விதித்துத் தங்கள் காரியங்களை மாத்திரம் சாதித்துக் கொண்டு வந்திருப்பதையும் நீங்கள் கண்டுகொள்ளலாம். இனி நமக்குள் ஒருவரையொருவர் இம்சை செய்ய முயற்சிக்கும் வேலையை விட்டு விட்டு வைதீகக் கொடுமையை ஒழிக்கத் தைரியமாய் முன் வாருங்கள்! "எங்கள் வீட்டுப் பெண்கள் ஓப்பமாட்டேன் என்கிறார்கள்" என்று பேசும் பெருமையை விறுத்துங்கள்! அவர்கள் பேரில் பழி சுமத்துவது அறியாமை என்று உணருங்கள்!

ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும், ஒரு வகுப்பிற்கும் மற்றொரு வகுப்பிற்கும் வேற்றுமை உண்டு பண்ணுவதும், தனி மனிதர்களுக்கும் வகுப்புகளுக்கும் பேசும் சுதந்தரம் அளிக்க மறுப்பதும், மக்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதுமான திட்டத்தை மதம் அங்கீகரிக்குமானால் அத்தகைய மதம் எவர்க்கும் உபயோகமாகாது.

தானம், பி. டி. ராஜன்.

ஜாதி ஒழிப்பு.

(சுபாஷ் சந்திரபோஷ்)

ஜாதியை ஒழிக்கவேண்டும் என்பதில் நான் அதி தீவிர மான நம்பிக்கையுடையவன். அது சம்பந்தமாக என்னா லான ப்ரசாரமும் செய்து வருகிறேன்.

சமுத்துவம், நியாயம் என்ற கொள்கைகளையே அடிப் படையாகக் கொண்டு உண்டாக்கப்படும் புதிய சமூகமே சுதந் தர இந்தியாவுக்கு அறிகுறியாகும். சிலர் தீண்டாமையை மாத் திரம் வெறுகின்றார்களே ஒழிய, சமபந்தி போஜனத்தை யும், கலப்பு மணத்தையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். நான் அத்தகைய மனப்பான்மையை உடையவன் அல்லேன். "நாம் எல்லோரும் ஒன்று" என்பதை ஒப்புக்கொள்வோமா னால் மனிதனுக்கு மனிதன் எவ்வித வேற்றுமையும் இருத் தல் கூடாது.

எந்தக் காரணத்தைக்கொண்டு இந்த ஜாதி வேற்றுமை உண்டாக்கப்பட்டதோ அது சுதந்தர இந்தியாவுக்கு ஏற்ற தல்ல. சண்டை செய்வதற்கு ஒரு வகுப்பார் மட்டுந்தான் தகுதியும், பொறுப்பும் உள்ளவர்களென்று ஒதுக்கி வைப்பது இக்காலத்தில் ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. அதுபோலவே ஒரு வகுப்பார் தான் கல்வி கற்கும் சாதனங்களுக்குத் தகுதி யுடையவர்களென்று ஒதுக்கிவைப்பதும் பொருத்தமற்றதா கும். வியாபாரம் செய்ய வேறொரு ஜாதியார் மட்டுந்தான் தகுதியுடையவர்களென்று கட்டுப்படுத்துவதும் ஏற்றுக்கொள் ளத் தகாததாகும். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதருக்கும், கல்வி கற்கவும், சண்டை செய்யப் பழகவும், சுதந்தரமாகச் சம்பாதிக்கவும் வேண்டிய வசதிகள் இருக்கவேண்டுமென்று நவீன இந்தியா கருதுகிறது.

ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்றவைகள் ஜாதி வேற்றுமையை ஒழிப்பதில் மதிக்கத்தகுந்த சேவை செய்து வந்திருக்கின்றன. ஆனாலும் நாம் செய்யவேண்டியது என் னவென்றால் இந்து சமூகத்தில் உள்ள வைதீக வகுப்பாரை இந்த நவீனக்கொள்கைக்கு மாற்ற வேண்டியதேயாகும்.

ராம—ராவண ஆராய்ச்சி.

(சித்திரபுத்திரன்.)

ராமனின் "தெய்வீகத்தன்மையும்" ராவணனின் "ராக்ஷதத்தன்மையும்."

———)o(———

ராமனின் தெய்வீகத்தன்மையான காரியங்கள்.

1. ராமன் தாடகையைக் கொன்று யாகம் நடத்திக் கொடுத்தான்.

2. சூர்ப்பகையின் மூக்கையும், காதையும் அறுக்கும் படி தம்பிக்கு உத்தரவு கொடுத்தான்.

3. வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்குப் பட்டங் கட்டினான்.

4. ராவணனைக் கொன்று விபீஷணனுக்குப் பட்டங்கட்டினான்.

இந்த வைதீகக் கோஷ்டியாரின் மனப்பான்மையை மாற்றுவதில் ஆரிய சமாஜமும், பிரம்ம சமாஜமும் அவ்வளவாக வேலை செய்ய முடியாதென்றே எண்ணுகின்றேன. வைதீக கோஷ்டியில் உள்ள அங்கத்தினர்களும், அவர்களைத்திருத்துவதில் அதிக முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும்.

மனித சரித்திரத்தைப் படித்ததிலிருந்து கலப்பு மணமே இரத்தக்கலப்பை உண்டாக்குவதோடு இந்திய ஜாதிக்கும், சகரீகத்துக்கும் ஓர் புதிய சக்தியையும், வேகத்தையும் உண்டாக்கும் என்று நம்புகின்றேன்.

ஆகையால் எல்லாவற்றையும் விட ஜாதியை ஒழிக்க வேண்டிய வேலையே உடனே கவனிக்கப்படவேண்டியதாகும். இதற்காகப் பல வேறு சங்கங்கள் செய்து வரும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன் அவர்களுடைய முயற்சி வெற்றிபெறும் என்றும் சுதந்தர இந்தியாவுக்கு ஒரு புதிய சமூகத்தையும், ஜாதியையும் கொடுத்து உதவுவார்கள் என்றும் நம்புகின்றேன்.

5. 5-மாத கர்ப்பத்தோடு தன் பெண்ஜாதியான சீதை யை விபசாரப்பட்டம் கட்டி தனியே காட்டில் கொண்டுபோய் விட்டு வந்தான்.

இந்த ஐந்து அரும்பெருங் காரியங்களைச் செய்திருக் கிறான் ராமன்.

இந்தக் காரியங்களிலிருந்து ராமனிடத்தில் தெய்வத்தன் மையோ, நீதியோ, அறிவுடைமையோ, மனுஷ்யத் தன்மை யோ ஏதாவது இருக்கிறதாகச் சொல்லமுடியுமா?

1. தாடகையைக் கொன்றதற்காக என்ன சமாதானம் சொல்லமுடியும்?

தாடகை செய்த குற்றமென்பதெல்லாம் அவள் தேவர் (ஆரியர்) களுடைய யாகத்தைத் தடுத்துக்கொண்டு வந் தாள் என்பதே. யாகம் என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதேயில்லை. குதிரை, மாடு, ஆடு, மனிதன் முதலிய ஜீவன்களை (சித்திரவதை செய்து) கொன்று பக்கு வம் செய்யும் ஒரு காரியமாகும். அதுதான் இன்று முறையே அஸ்வமேத யாகம், பசுமேத யாகம், அஜமேத யாகம், நர மேத யாகம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

இன்றுகூடப் பார்ப்பனர்கள் எங்காவது யாகம் செய்ய தாயிருந்தால், ஜீவகாருண்ய மதக்காரர்கள் என்று சொல்லப் படும் ஜைனர்களும், மற்றும் சைவர்களும், ஜீவகாருண்யமுடை யவர்களும் ஆட்சேபிப்பதை நாம் பார்க்கின்றோம். யாகங் களைத் தடுக்கும்படியாக சட்டம் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரை வேண்டுகின்றோம்.

யாகத்தைத் தடுத்ததற்காகவே ஜைனர்கள் கழுவேற்றப் பட்டிருக்கிறார்கள் என்றும் புராணங்களில் அறிகிறோம். திரு வள்ளுவர் புத்தர் முதலிய பலபெரியோர்கள் யாகத்தைக் கண் டித்தும் இருக்கிறார்கள். சென்ற மாதத்தில் தேவகோட்டை யில் நடந்த யாகத்தைக்கூட பலர் தடுத்தும், கடைசியாக யா கம் செய்த பார்ப்பனர்கள் சர்க்காரிடம் முறையிட்டு ரிசர்வ் போலீஸ்காரர்கள் பந்தோபஸ்தின்மீது யாகம் நடத்தப்பட்டி ருக்கிறது.

இந்தக்காலத்திலேயே யாகத்துக்கு இப்படி ஆக்ஷேப னைகளும் எதிர்ப்புகளும் இருக்கும்போது அந்தக்காலத்தில்,

ஆரியர்கள் இக்காட்டில் பிரவேசித்த ஆரம்ப காலத்தில் இம் மாதிரியான ஜீவ இம்சைக்கு எதிர்ப்பு இல்லாமல் இருக்கும் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்?

ராஜ குடும்பத்தைச்சேர்ந்த தாடகை என்கின்ற வயது சென்ற பெண் ஒருத்தி யாகத்தை ஆட்சேபித்ததற்காக அவள் கொல்லப்படுவது என்றால், அதுவும் தெய்வத்தன்மை உடையவன் என்று சொல்லப்படும் ஒரு ராஜகுமாரனால் கொல்லப்படுவது என்றால் இது எப்படி நீதியாகும்?

யாகம் செய்யவேண்டிய ஆரியர் மனிதத் தன்மையும் யோக்கியமும் உடையவர்களாய் இருந்திருந்தால் தாடகையைச் சிறைப்படுத்தி வைத்திருந்து யாகம் முடிந்தபின்பு விடுதலை செய்திருக்கலாம் அல்லவா? அப்படி இல்லாமல், அவளை வில்லால் அம்புவிட்டு ராமன் கொன்ற செய்கை எந்தச்சட்டப் படி நீதியாகும்? இன்று எந்த அரசாங்கத்திலாவது இப்படிப்பட்ட கொடுமையான அநீதியைப்பார்க்கிறோமா? அல்லது காதிலாவது கேட்கிறோமா?

2. சூர்ப்ப நகையை மூக்கும் காதும் அறுத்தது என்பது எப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனமான செய்கை என்பதை அவரவர்களே தான் யோசித்துப் பார்க்கவேண்டும். சூர்ப்பநகை செய்த தப்பிதமெல்லாம் "ராமனைப்புணர" ஆசைப்பட்டாள் என்பதேயாகும். இது ஒரு பெரிய குற்றமாகுமா? முதலாவது ஒரு பெண், அதிலும் ராஜகுடியபத்தைச்சேர்ந்தவள் காட்டில் திரியும் இரு வாலிபர்களை வலிய அணைய ஆசைப்பட்டாள் என்பது சாதாரணமான இயற்கை கடப்புக்கு அதிதப்பட்ட காரியமேயாகும். அப்படித்தான் ராமன் மீது காதல் கொண்டுவிட்டதினாலேயே அது காதும் மூக்கும் அறுக்கவேண்டியதான அவ்வளவு பெரிய குற்றமாக ஆகிவிடுமா? இந்தக்காரியமானது இன்றைய உலக நடப்புத் தன்மைக்கு எவ்வளவு இழிவானதும், கீழ் மக்கள் செய்கை என்று சொல்லக்கூடியதுமானதாகும் என்பதை யோசித்தால் ராமன் தெய்வத்தன்மை கொண்வடன் என்றோ, கல்ல குடிப்பிறப்பினன் என்றோ, நீதிக்கும் மனுஷ்யத்தன்மைக்கும் கட்டுப்பட்டவனாய் இருந்தான் என்றோ சொல்லமுடியுமா?

---

3. வாலியைக்கொன்றதைக் கவனிப்போம். வாலிக்கும் ராமனுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. வாலிக்கும் அவன் தம்பி சுக்ரீவனுக்கும் ஏதாவது தகறாறு இருந்திருக்கலாம்.

கிஷ்கிந்தா ராஜ்யம் வாலிக்குச் சொந்தமானது என்பதில் சந்தேகமில்லை. எனென்றால் வாலி ஜேஷ்ட குமாரன் ஆனதால் அவனுக்குப் பட்டம் வந்துவிட்டது.

வாலி அயல் நாடுகளுக்குச்சென்ற காலத்தில் சுக்கிரீவன் ராஜியபாரம் செய்து வந்தான். வாலி திரும்பி வந்து கேட்டவுடன் சுக்கிரீவன் ராஜியத்தை வாலியிடம் ஒப்புவித்து இருக்கவேண்டியது நேர்மையாகும். அப்படிக்கில்லாமல் சகோதரத் துரோகியும் நம்பிக்கைத் துரோகியுமான சுக்ரீவன், எஜமானத்துரோகியான அனுமானை வசப்படுத்திக்கொண்டு இருவரும் ராஜாவுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்து ராஜ்யத்தை வாலிக்குக்கொடுக்க மறுத்ததால் வாலி சுக்கிரீவனுடன் போர் புரிந்து ஜெயித்து சுக்கிரீவனை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று.

அந்த முறையில் அவன் மனைவியைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள வாலி எண்ணியதாகவே வைத்துக்கொண்டாலும் இதற்காக ராமன் வாலியைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன? பழயகால யுத்த முறைகளில் பெண்களைக் கைப்பற்றும் விஷயங்களும் இருந்ததாகக் காணப்படுவதை வைத்துக் கொண்டு பார்க்கும்போது, வாலியை ராமன் கொன்றது என்பது எவ்வளவு துர்க்கிருதமான காரியம் என்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

ராமன் வாலியைக்கொன்றதானது எதாவது ஒரு நீதியைக்கொண்டதாக இருந்திருக்குமானால் வாலிக்குப் பிறகு அந்த ராஜ்யத்துக்கு வாலியின் குமாரனான அங்கதனுக்கல்லவா பட்டாபிஷேகம் செய்திருக்கவேண்டும்? அப்படியில்லாமல் சுக்கிரீவனுக்குப்பட்டங்கட்டப்பட்டதானது, சூழ்ச்சியின் காரணமாகவே ராமன் வாலியைக் கொன்றான் என்பதற்கு மற்று மோர் ஆதாரமாகின்றதல்லவா? இந்தக் காரியத்தாலும் ராமனிடம் தெய்வத் தன்மையோ, மனிதத் தன்மையோ, நீதியோ, ஒழுக்கமோ இருந்ததாகக் காணப்படவில்லை.

4. ராமன் ராவணனைக் கொன்றது, சம்பந்தமாக ராவணன் செய்த குற்றம் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு முன்பதாக ஒரு சங்கதியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது:— ராமாயண நிகழ்ச்சி, ராவண ஆட்சி, ராம ராவண யுத்தம் எல்லாம்

பூலோகம் என்கின்ற இந்த உலகத்தில் நடந்தவைகளே ஓழிய மேலுலகம் என்பதிலோ, கீழுலகம் என்பதிலோ நடந்தவை யல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இராவணன் செய்த குற்றங்கள்.

1. தேவர்களைக் கொடுமைப் படுத்தினது.

2. முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும் அவரவர்கள் காரியங்களைச் செய்யவிவாட்டாமல் தடுத்துத் தொல்லை கொடுத்தது.

3. சீதையைத் திருடினது.

இராவணன் எப்படிப்பட்டவனென்பதை அறிந்தால் இக்குற்றங்களை அவன் செய்திருப்பானா என்பது யாவருக்கும் விளங்கும்.

1. இராவணன் மகா கல்வியான். 2. வேத சாஸ்திரங்களில் விற்பனன். 3. குடிகளையும், சுற்றத்தார்களையும் இரக்கமுடன் ஆதரித்தவன். 4. தைரியசாலி. 5. வீரன். 6. ஆச்சரியப்படத்தக்க அதி பலசாலி. 7. மிகவும் பக்திமான், 8. தவ சிரேஷ்டன், 9. கடவுளுடைய பிரீதிக்குப் பாத்திரனானவன், 10 பல வரங்களைப் பெற்ற வரப்பிரசாதி. இராவணனுக்கு இந்தப் பத்து குணங்களையும் வால்மீகியே கற்பித்திருக்கிறார்.

இப்படிப்பட்டவன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினானென்றால் கம்பமுடியுமா? இக்குற்றத்தைச் சாட்டுவதற்கு முன் தேவர்கள் யார் என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

மேல் லோகத்தில் இருப்பதாய் சொல்லப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு இந்த பூலோகமாகிய நர லோகத்தில் வேலை கிடையாது.

அப்படிப்பட்ட தேவர்களை இப்படிப்பட்ட 10 குணங்களுள்ள ராவணன் கொடுமைப்படுத்துவான் என்று அறிவுள்ள யாரும் கம்பமுடியாது.

இன்றையதினம் இங்கு பூதேவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு, எப்படி ஒரு கூட்ட மக்கள், மற்ற சமூகத்தாருடைய சுதந்தரத்துக்கும், சுயமரியாதைக்கும் முட்டுக்கட்டை

யாயிருந்து வாழ்ந்து வருகிறார்களோ, அதுபோலவேதான் அப்போதும் இக்கூட்டம் தங்களைத் தேவர் என்று சொல்லிக்கொண்டு மக்களுக்குத் தொல்லை செய்துகொண்டு வந்திருப்பார்கள்.

அத்தொல்லையை ஒழிப்பதற்கு இன்றும் பலர் முயற்சிப்பது போல், அப்பொழுது ராவணன் முயற்சித்திருக்கலாம்.

அதனால் ராவணனை தேவர்களுக்கு இடுக்கண் விளைவித்தவனாகக் கட்டுக்கட்டி மக்களை ஏமாற்றியிருக்கலாம்.

இராமாயணக் கதையைப் பற்றி எழுதுகிற சரித்திரக்காரர்கள் ராமாயணத்தை ஆரியர், திராவிடர் போராட்டமென்று சொல்லுவதும், இன்று பார்ப்பனர்களாகிய பூதேவர்களுக்கு விரோதமாக ஏதாவது காரியங்கள் செய்யப்பட்டால் அந்த அரசாங்கத்தையும, ஆட்களையும் புராணக் கதைகளை ஒப்பிட்டு ராக்ஷதர்களாக ஆக்கிப் பழித்து இழித்துக் கூறி விஷமப் பிரசாரம் செய்வதையுமே அக்கூற்றுக்கு ஆதாரமாய்க் கொள்ளலாம்.

2. இராவணன் முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும் இடையூறு செய்ததைப் பற்றி யோசிப்போம். முனிவர், ரிஷிகள் என்பவர்கள் ஆரியர்களுக்குள்ளாகவே ஒரு கூட்டத்தாராகும். அதாவது ஆரிய ஆச்சார அனுஷ்டானங்களை மிகவும் கடினமாக அனுஷ்டிப்பவர்களாகும். இக்கூட்டத்தார் ஆரியரல்லாதவர்களைக் காணுவதும் தீது, அவர்களோடு பேசுவதும் தீது, அவர்களோடு கெருங்குவதும் தீது, இணங்குவதும் தீது என்று கருதி ஆரியரல்லாத மக்களை மிகவும் இழிவாய்க் கருதி கடத்துகின்றார்கள்.

இன்றும் பார்ப்பனர்கள் திலகமகரிஷி ரமணரிஷி காந்தி ரிஷி என்றும், ராய் முனிவர், தாதாபாய் முனிவர், சுப்பரமணிய அய்யர் முனீந்திரர் என்றெல்லாம் சாதாரண மக்களையே அழைத்து அந்தப் பெயரை பிரசாரம் செய்து நிலை நிறுத்துவதுபோல் சில ஆட்களுக்கு அந்தப் பட்டம் இருந்திருக்கலாம்.

ஆனால் அப்படிப்பட்ட முனிவர்களும் ரிஷிகளும் மற்ற மக்களை கடத்துகின்ற மாதிரியைப்பார்த்தால் எந்த வீரனுக்காவது ஜீவகாருண்ய வாதிக்காவது ஆத்திரமும் கோபமும் வராமல் இருக்க முடியுமா?

இந்த முனிவர்களும் ரிஷிகளும் உண்மையான "முனிவர்" களாகவும் "ரிஷி"களாகவும் இருந்திருந்தால் ராவணனுக்கு அவர்கள் கிட்ட நெருங்கியிருக்க முடிந்திருக்குமா?

ஒன்று, ராவணன் பக்தியும் தவமும் கொண்டவனாய் இருந்திருந்தால் இப்படிப்பட்ட காரியம் செய்திருக்க மாட்டான் என்றாவது எண்ணவேண்டும். அல்லது ரிஷிகளும் முனிகளும் உண்மையானவர்களாய் யோக்கியர்களாய் இருந்திருந்தால் இராவணனால் அவர்களுக்கு ஒரு கெடுதியும் செய்ய முடிந்திருக்காது என்றாவது எண்ணவேண்டும். அப்படிக்கில்லாமல் இரண்டும் கெட்ட தனமாய் கதையில் சொல்லப்பட்ட விஷயத்தைப்பொருந்தாத கற்பனை என்றுதான் சொல்லவேண்டும்.

3. சீதையைத் திருடிக்கொண்டுபோய் விட்டதைக் கவனிப்போம்.

சீதை சட்டதிட்ட ஆதிக்கமில்லாத காட்டில் வசித்து வந்தவள். அவன் கடத்தையில் இருந்து அவள் ஒரு சதாரணமான பெண் என்பது விளங்கும்.

அதாவது ராமன் மானை விரட்டிக்கொண்டு சென்ற பிறகு லட்சுமணனையும் போய் ராமனைப்பார்த்து வரும்படி சீதை சொன்ன சமயத்தில், லட்சுமணன் காட்டில் உன்னைத் தனியே விட்டு விட்டுப் போகக்கூடாது என்றும், ராமனுக்கு ஒரு குறைவும் வராது என்றும் சொன்ன கல்வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல், "ராமன் எப்படியாவது தொலைந்தால் என்னை நீ கைப்பற்றி அனுபவிக்கலாம் என்று கருதி, ராமனைக்காப்பாற்றப் போக மறுக்கிறாயா?" என்று சொன்னதில் இருந்தே சீதை கீழ் மக்களைச்சேர்ந்தவள் என்பதும், அந்தக்கூட்டத்தாருள் எப்படிப் பட்ட வழக்கம் இருந்து வந்தது என்பதும், லட்சுமணன், சீதையிடம் அது வரையில் எப்படி நடந்து வந்திருக்கிறான் என்பதும் நன்றாய் விளங்குகின்றது.

மற்றும் ராமன் ராவணனுடைய பாட்டியைக் கொன்று இருக்கிறான். ராவணனுடைய தங்கையை மூக்கும் காதும் அறுக்கச் செய்திருக்கிறான். இப்படிப்பட்ட யோக்கியனுடைய பெண்சாதியைத் தூக்கிக்கொண்டுவந்தது என்பது, எந்தச்சட்டப்படி, நீதி நூல்படி, பழக்கவழக்கப்படி, இயற்கை நந்தவப்படி குற்றமென்பது விளங்கவில்லை.

அன்றியும், சீதையை ராவணன் என்ன செய்தான்? அவள்மீது இரக்கம் கொண்டு சீதைக்குப்புத்திமதி கூறி இருக்கிறான். ராம லட்சுமணர்களின் யோக்கியதையையும், இரும்பையும் எடுத்துச் சொல்லி அவர்கள்மீதுள்ள ஆசைகளை விட்டு விட்டுத் தன்னிடமே இருந்துவிடும்படி சொன்னான்.

ராம லட்சுமணர்கள், தாடகை, சூர்ப்பனகை ஆகியவர்களிடம் கடந்துகொண்டதுபோல் அவ்வளவு இழிவாய் கடந்து கொள்ளாமல்ராவணன் சீதையை மிகவும் பத்திரமாகவும், நீதியாகவும் வைத்துக் காப்பாற்றியிருக்கிறான்.

ஒரு பெண்ணை ஒருவன் இச்சிப்பதோ, ஒரு ஆணை ஒரு பெண் இச்சிப்பதோ, இணங்கும்படி கேட்பதோ, கெஞ்சுவதோ குற்றமாகும் என்று சொல்லுவது இயற்கையையும், மனித சுபாவத்தையும் அறியாத முட்டாள் தனமேயாகும்.

பலாத்காரம் செய்வதையும் இணங்கவைக்கக் கொடுமை செய்வதையும் மாத்திரம் குற்றமென்று சொல்லலாம்.

பெண்கள் ஆண்களுடைய சொத்துக்கள், ஆண்களின் அடிமைகள் என்கின்ற சட்டப்படி வேண்டுமானால் ஒருவன் மனைவியை ஒருவன் இச்சிப்பது தப்பு என்று சொல்லலாமேயொழிய பெண்களும் ஆண்களைப்போன்ற ஜீவனாகும் என்றும், அவர்களுக்கும் காதல் சுதந்தரம் உண்டு என்றும் நினைத்தால் சீதையை ராவணன் தனக்கு இணங்கும்படி கேட்டுக் கொண்டதில் என்ன தப்பு இருக்கிறது என்பது விளங்கவில்லை.

மற்றபடி ராவணன் சீதையை பலாத்காரம் செய்ததாகவோ, சீதையைக் கொடுமைப்படுத்தியதாகவோ, குரூரமாய் நடத்தியதாகவோ, ராவணனை இழித்துக் கூறுவதையே கொள்கையாகக் கொண்ட ராமாயணத்திலேயே ஒரு வரிகூட காணக்கிடைக்கவில்லை. ஆதலால் அவ்விஷயத்தில் ராவணன் பெருங்குற்றவாளி எனறு சொல்லிவிடமுடியாது.

ராவணனுடைய மற்ற யோக்கியதைகள், வால்மீகி கூறியபடி உண்மையாய் இருக்குமானால், இந்தக் காரியத்தை யாவது ராவணன் செய்திருப்பானா என்று சந்தேகிக்காமலிருக்கமுடியாது.

ஆகவே வாலி, ராவணன் சங்கதி இப்படி இருக்கட்டும்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ராமன் தெய்வத்தன்மையுடையவனும், கோர்மைக்குணம் படைத்தவனுமாய் இருந்திருந்தால் சுக்கிரீவனையும், விபீஷணனையும் வசப்படுத்தி அவர்களது தமையன்மார்களுக்கு விரோதமாக, சகோதரத் துரோகம் செய்யத்தூண்டியிருப்பானா?

பரதன் ராமனிடத்தில் எப்படி நடந்துகொண்டானோ அப்படி விபீஷணனையும் சுக்கிரீவனையும் முறையே ராவணனிடத்திலும், வாலியிடத்திலும் கடந்துகொள்ளும்படி செய்திருக்கவேண்டும்அல்லவா?

பரதன் ராமனிடத்தில் நடந்து கொண்டதுபோல் விபீஷணன் ராவணனிடம் நடந்து கொண்டிருப்பானேயானால் விபீஷணனை ஆழ்வாராக்கியிருப்பார்களா? அவனுக்கு பட்டம் கட்டியிருப்பார்களா? என்று யோசித்துப்பார்த்தால் ராமனுடைய சூதும் சூழ்ச்சியும் விளங்காமல் போகாது. யாதொருகுற்றமற்றகைகேசி, தன் மகனுக்குப் பட்டம் வேண்டும் என்று கேட்டதற்காக, அதுவும் கைகேசியிடமும், கைகேசியின் தகப்பனாரான கேகய மன்னனிடமும், கைகேசி வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே பட்டம் சூட்டுகிறேன் என்று தசதரன் வாக்குக்கொடுத்தபடி மகனுக்குப்பட்டம் கேட்ட கைகேசியான தாயாரைக்கூட இகழ்ந்து இழிவு படுத்தியல்லவாபரதன் தமயனுக்கு தொண்டு செய்து பக்தி காட்டி இருக்கிறான்.

அப்படிப்பட்ட சகோதர பக்தியும், தொண்டும், அதன் பெருமையை உணரும் தன்மையும், விபீஷணனிடம் ஏன் இல்லாமல் போய்விட்டது?

விபீணனுக்குச் சகோதரத் துரோகி பட்டம் இல்லாமல் ஆழ்வார் பட்டம் எங்கிருந்து வந்தது? விபீஷணனுடைய தொண்டையும், சகோதரத்துரோகத்தையும் தெய்வத்தன்மையுடைய ராமன் ஏற்றுக்கொள்ளலாமா?

இவைகள் ஒருபுறமிருக்க, ராமன் சீதையை எப்படி கடத்தி இருக்கிறான் என்பது ராமாயணக்கதையில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய பாகமாகும்.

ராமாயண சீதையானவள் உலகப்பெண்களுக்கு ஓர் உதாரணமாய் கற்பிக்கப்பட்டவள்; அவளுடைய பதி பக்தி மிக்க விசேஷமாய் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. அவளது பிறப்

பைப்பற்றி அறிய அறிவுக்கு ஒத்ததான ஆதாரம் ஒன்றும் இல்லை. மற்றபடி ராமனுக்கு மனைவியானாள் என்பதும், ராமனுடன் காட்டுக்கு வந்துவிட்டாள் என்பதும், ராவணன் தூக்கிக்கொண்டுபோய் எவ்வளவு முயற்சித்தும் அவள் இணங்கவில்லைனன்பதுமாகிய காரியங்கள் தான் சீதையின் பெருமைகுக காரணமாகும்.

அப்படிப்பட்ட சீதையின் கற்பு, கொண்ட கணவனால்—தெய்வத்தன்மை கொண்ட ராமனால்—சீதையுடன் சதாசர்வ காலமும் பழகி அவளது குணா குணங்களை நன்றாய் அறிந்த ராமனால் ஒரு தடவை அல்லாமல் பலதடவை சந்தேகிக்கும் படி ஏற்பட்டு விட்டது.

சீதை நெருப்பில் இறங்கி வந்துகூட ராமனுக்கு அவள் மீதில் உள்ள சந்தேகம் தீராமல் போய்விட்டது. கடைசியாக கதையின் முடிவானது சீதை 5-மாத கர்ப்பத்துடன் தனியே காட்டிற்குக் கொண்டுபோய் விடப்பட்டாள் என்று முடிந்தது.

இந்தக் காரியம் எப்படி மன்னிக்கப்படக் கூடியது என்பது விளங்கவில்லை. "உலக மெப்புதலைக்காக செய்யப்பட்டது" என்றாலும் இந்தச் சம்பவத்தால் மக்களுக்கு என்ன நீதி, படிப்பினை ஏற்பட்டது என்பதுமக்கு விளங்கவில்லை.

இதைப்பார்க்கின்றபோது, அதாவது தனது மனைவியை 5-மாத கர்ப்பத்துடன் துஷ்ட ஜந்துக்கள் வாழும் கானகத்தில் கொண்டுபோய் தனியே விட்டுவரும்படி செய்தவன், தாடகையைக் கொன்றதும், சூர்ப்பநகையின் மூக்கையும், காதையும் அறுக்கும்படி செய்ததும் ஒரு ஆச்சரியமென்று சொல்லமுடியாது. ஆகவே ராமன் ஆண்கள் விஷயத்தில் கடந்துகொண்டமாதிரிக்கு வாலி, ராவணன் வதையும், சுக்கிரீவன் விபீஷணே சமும், ராமன் பெண்கள் விஷயத்தில் கடந்துகொண்ட மாதிரிக்கு தாடகை வதம், சூர்ப்பனகை பங்கம், சீதை காட்டுக்கு அனுப்பப்பட்டதும் முதலியவைதக்கதொரு அத்தாட்சியாகும்.

மனிதசமூகத்திற்கு அப்பாலிருந்து உற்பவிக்கப்பட்டதென்ற ஓழுக்கம் என்பதாக ஒன்று இருப்பதை நாம் ஒப்புக்கொள்வதில்லை. லெனின்.

விபசாரம் பெருகுவதேன்?

சோத்துரிமை.

ஸ்திரீகள் விஷயத்தில் இந்துலா கூறுவது.

ஒரு பெண் புருஷன் இருக்கும்போது விபசாரியாக ஆகி விட்டால் புருஷன் சொத்தில் பாத்தியம் கிடையாது.

புருஷன் இறந்த பிறகு அந்தச்சொத்தை அடைந்து அப் புறம் விபசாரியாக ஆகிவிட்டால் அவளுக்குப் புருஷன் சொத் தை அனுபவிக்க உரிமை உண்டு.

ஆனால் அதே விதவை (விபசாரித்தனம் செய்வது சரி யல்ல என்று கருதி) யாரையாவது கல்யாணம் செய்து கொள் வாளேயானால் அவள் முந்தின புருஷன் சொத்தை அடைவத ற்கு அருகதை அற்றவளாகி விடுகிறாள். அடைந்திருந்தாலும் அதை திரும்பக் கொடுத்துவிட வேண்டும். இதுமுறையே 24-மதராஸ் 411லும் 1856-ம் வருஷத்து விதவை மணச்சட் டத்திலும் இருக்கிறது.

ஆகவே பெண்கள் தனது புருஷன் இறந்து விட்டால் விபசாரிகளாக ஆகிவிடலாமே தவிர வேறு புருஷனை மணந்து கொள்ளக்கூடாது என்பதே இந்துக்கள் சட்டமாய் இருக்கிறது.

இதனாலேயே விபசாரித்தனம் இந்து சமூகத்தில் பெரு கவும் விதவை மணங்கள் குறைபடவும் காரணமாகி விட்டது.

கடவுள் மாறாதவர் என்று சொல்லுகிறீர்கள்! ஆனால் அவருடைய பரிணாமமாகிய இவ்வுலகத்தில் சகல வஸ்துக்களும் சதா மாறிக்கொண்டே இருப்பதற்குக் காரணமென்ன?

ஜீன் மெஸ்லியர்.

அமங்கலி சுமங்கலியானாள்.

(S. சிவப்பிரகாசம்.)

1. வானிலுறை மதியோ?—புவி
வண்ணக் களஞ்சியமோ?
கானிலுறை மயிலோ?—இன்பக்
கன்னல் மொழிக் குயிலோ?
மேனி இளந்தளிரோ?—அந்த
மெல்லிழை வார் சிலையோ?
கானிலந் தன்னி லெங்கும்—இந்த
கங்கைக் கிணை யறியேன்!

2. தேமலர்ச் சோலை யொன்றில்—இவள்
தென்றலுலவையி லோர்
பூமலர் கொய்து நின்றாள்—அவள்
பொற்பை யுரைப்பதுண்டோ!
காழுறு தண் மலரில்—மற்றக்
கண்மலர் ஒன்றியதும்
தேமொழி மங்கையினாள்—செப்பும்
சேதியை இங்குரைப்பேன்:—

3. "வாசமிகு மலரே!—என்றன்
வண்ணக் களஞ்சியமே!—உன்
நேசமதை இழந்தேன்—பெற்றோர்
கிர்ப்பந்தம் சொல்வதுண்டோ?
ஆசை எனக் கிலையோ—உனை
அணிந்து கொள்வதற்கே
மோச மிதுவல்லவோ—என்றன்
மூத்தவர் சூடுகின்றார்!"

4. என்று மனங் கசிந்தே—இவள்
ஏங்கிடும் வேளையிலே
தென்றலும் மெல்லெனவே—வீசித்
தேகத்தை கன்று செய,
இன்ப உணர்வடைந்தாள்—கங்கை
இயற்கை மீறுவதோ?
துன்பஞ் சகியாமல்—மனம்
சோர்ந்து விழுந்துவிட்டாள்!

5. தூரத்தில் நின்றிருந்தே—கண்ட
சுந்தரன் ஓடிவந்து
பூரணச் சந்திரன்போல்—உள்ள
பொற் கொடியாள் தனையே,
வாரித் துடை சேர்த்தே—அந்த
வஞ்சியைத் தேற்றியதும்,
"நேரமில்லாத கோபம்—வந்தாய்
நீ எதற்காக கொந்தாய்?"

6. என்றதும், மாதரசி—கண்ணை
ஏறிட்டுப் பார்த்தவுடன்
கண்பன் எனத் தெளிந்தே—மனம்
காணித் தலை குனிந்தாள்!
பின்னர் விலகி நின்றாள்—எனிற்
பேச மன முவந்தாள்!
கண்களில் நீர் ததும்பத்—தன்
கதை தொடர்ந்தனளே!

7. "சின்னஞ் சிறுவயதில்—எனையோர்
சீமான் மணந்திறந்தார்
அன்று தொடங்கி எனைக்—கெட்ட
அமங்கலை என்றார்!
பொன்னுடை பூஷணங்கள்—நல்ல
பூகள உணவுகளும
அன்று முதலிழந்தேன்!—இதை
யாரிடஞ் சொல்லிடுவேன்?

8. "பெற்று வளர்த்தார்கள்—அன்பிற்
பேணி மகிழ்ந்தார்கள்.
பெற்றவர் கண்களுக்கே—யான்
பெருஞ்சனி யானேன்!
மற்றவரென் நினைப்பார்?—இந்த
மங்கை உயிர் வெறுத்தேன்!
நற்றேன் மலர்ச்சோலை—தன்னில்
நங்கையும் மாளவந்தேன்!"

9. என்றனள்; பூவிழிகள்—நீர்
எங்கும் பொழிந்தனவே!
நின்றவிடத்திலேயே—சுந்தரன்
நிலை கலங்கலுற்றான்!

பின்பொரு சேதியென்றான்—மங்கை
பேச்சைக் கவனித்தனள்.
சொன்னான் பலசேதி—பின்னும்
சொல்வதை ஈங்குரைப்பேன்:—

10. "விதவை யென்றிடுவார்!—நாளும்
வீட்டிலடைத்திடுவார்!
மதங்களென்று சொல்வார்—பொல்லா
வாதனை செய்திடுவார்;
விதியெனப் புகல்வார்—கற்பு
விரதம் என்றுரைப்பார்
மதியிழக்காதே!—அந்த
மனிதர் வார்த்தையினில்;

11. காதல் இயற்கையன்றோ?—அதைக்
கட்டுப்படுத்தல் நன்றோ?
சாதல் இனிமையன்றோ—ஒரு
சஞ்சலமில்லையன்றோ?
ஆதலின் உன்மனதுக்—கொத்த
ஆளனை நீ மணப்பாய்!
தீதிலை சொல்லிவிட்டேன்—நீ
சித்தங்கலங்காதே!"

12. என்றனன்; மாதரசி—எண்ணி
இசைந்தனள்; சிறிது
புன்னகை கொண்டுநின்றாள்—சுந்தரன்
பூவையின் எண்ணங்கண்டான்!
நன்றென ஒப்பினரே—முத்தம்
நன்மலர்ச்சோலையிலே
இன்பக் கரையடைந்தார்!—புவி
ஈனநிலை கடந்தார்!

கஷ்டத்திலிருந்து உண்மையும், கடைத்தேற்றலிலிருந்து நன்றி விசுவாசமும், துக்கத்திலிருந்து சுகமும், விடுதலையிலிருந்து நம்பிக்கையும் பிறக்கிறது.

ரஸ்கின்.

புராண மரியாதைக்காரனுக்கும், சுயமரியாதைக்காரனுக்கும் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன்)

விஷயம்:—மோக்ஷமடைய காசிக்குப்போவது.

சுயமரியாதைக்காரன்:— ஐயா தாங்கள் இவ்வளவு அவசரமாக எங்கு சென்றுவிட்டு வருகிறீர்கள்?

புராணமரியதைக்காரன்:—எங்கும் இல்லை. ஒரு இடத்தில் கொஞ்சம் கடன் கேட்டிருந்தேன்; அதற்காகப் போய்விட்டு வருகிறேன்

சு. ம:—தங்களுக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமென்ன? தங்கள் பிள்ளைகள் எவ்வளவோ நல்ல நிலையில் இருக்கும்போது நீங்கள் கூடவா கடன் வாங்கவேண்டும்?

பு. ம:— நான் யாத்திரை போகப்போகிறேன்; அதற்காகப் பணம் வேண்டும். பிள்ளைகளைக்கேட்டால் கொடுக்க மாட்டான்கள்.

சு. ம:— இப்பொழுது என்ன யாத்திரை வந்தது தங்களுக்கு?

பு. ம:— கொஞ்ச காலமாகவே எனக்குக் காசிக்குப்போக வேண்டும் என்கின்ற அவா; கடவுள் செயலால் அது இப்போதுதான் முடிந்தது. ஆதலால் காசிக்குப்போகிறேன்.

சு. ம:— என்ன அய்யா இது அதிசயமாய் இருக்கிறது! இத்தப்பண நெருக்கடியான சமயத்தில் கடன் வாங்கிக்கொண்டு காசிக்குப்போகிறேன் என்று சொல்லுகிறீர்களே! அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது?

பு. ம:— ஒரு அவசரமும் புதிதாய் வந்து விடவில்லை; இத்தப்பாழாய்ப்போன சுயமரியாதை இயக்கம் வந்து நம்ம பிள்ளைகளையெல்லாம் கெடுத்து விட்டது. அதனால்தான் நான் இவ்வளவு கஷ்டத்துடன் காசியாத்திரை வைத்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

சு. ம:— சுயமரியாதை இயக்கத்துக்கும் தாங்கள் காசிக்குப்போகவேண்டியதற்கும் என்ன சம்பந்தம்?

பு. ம:— சம்பந்தம் என்னவென்றா கேட்கிறீர்கள்? நானோ வயது முதிர்ந்த கிழவன்; எனது உடல் நிலை மிகவும் மோசமாய் இருக்கிறது; எந்தச்சமயத்தில் பகவான் தனது திருவடி நிழலுக்கு அழைத்துக் கொள்ளுவாரோ தெரிய வில்லை. ஒருசமயம் அந்தப்படி ஏதாவது திடீர் என்று ஏற் பட்டு விட்டால், என்னுடைய பிள்ளைகள் எனக்குச்செய்ய வேண்டிய சரமக்கிரியைகளையெல்லாம் செய்வார்களா? திதி செய்வார்களா? எள்ளுந்தண்ணீரும் இறைப்பார்களா? பிண் டம் போடுவார்களா? நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்! இந்த காசமாய்ப்போன சுயமரியாதைக்காரர்களால் எவ்வளவு அநியாயங்கள் ஏற்பட்டு விட்டன பாருங்கள்.

சு. ம:— அதைப்பற்றிச் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ள லாம்; இதற்காக காசிக்கு என் போகவேண்டும் என்று கேட் டால் அதற்கு ஒன்றும் சொல்லாமல் சுயமரியாதைக்காரர்க ளையே சும்மா வைகின்றீர்களே!

பு. ம:— இதற்காகத்தான் காசிக்குப்போகிறேன். இன் னும் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு மனிதன் காசியில் போய் இறந்து விட்டால் அவனுக்கு யாரும் திதி பண்ணி னாலும், பண்ணாவிட்டாலும், பிண்டம் போட்டாலும், போ டாவிட்டாலும், அவன் கவலைப்படவேண்டியதில்லை. காசி யில் இறந்தாலே மோக்ஷம் கிடைத்துவிடும். இதில் ஏதாவது கொஞ்சம் நஞ்சம் சந்தேகம் இருப்பதானால் கயாவுக்குப் போய் நமக்கு நாமே பிண்டம் போட்டுக்கொண்டு சிரார்த்தம் செய்து கொள்ளலாம்; வேறு எவனும் போடவேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆதலால் நான் இங்கிருந்து நேரே கயாவுக்குப் போய், அங்கு எனக்கு நானே சிரார்த்தம் செய்து கொண்டு பிறகு காசிக்குப்போய் காலத்தை எதிர்பார் த்துக்கொண்டு இருக்கப் போகிறேன்.

சு. ம:— அப்படியானால், தாங்கள் சொல்லுவதைப்பார்த் தால் மறுபடியும் இங்கு திரும்பி வரமாட்டீர்கள்போல் தோன் றுகிறதே!

பு. ம:— ஆம்! ஆம்!! இனி எனக்கு இங்கு என்ன வே லை? கடவுள் இருபையால் நான் பாடுபட்டு எவ்வளவோ சம் பாதித்தேன். பகவான் எனக்கு யாதொரு குறைவும் வைக்க

ஷில்லை. எல்லாவற்றையும் இந்தப் பிள்ளைகளுடைய படிப்புக்கும், கலியாணத்துக்கும், மற்ற சடங்குகளுக்கும் கன்றாய்ச் செலவு செய்தேன். அவர்கள் கல்ல நிலைமைக்கும் வந்தார்கள்; கடைசியாக இந்தச் சுயமரியாதைக்காரன்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, அவனுடைய பெற்ற தாயாருக்கே திதி, திவசம் ஒன்றும் கொடுப்பதில்லை. வீட்டிலோ ஒரு கால்-கிழமை-பண்டிகை என்பவை எதுவுமே இல்லை. இப்படிப்பட்டவன்கள் எனக்குத் திதி செய்வான்களா? எள்ளும் தண்ணீரும் கூட இறைக்கமாட்டான்களே! கொள்ளிகூட வைக்கமாட்டான்களே! ஆதலால் இங்கே இருந்து இறந்து கருமங்கள் செய்யப்படாமல் என் ஆத்மா நரகத்துக்குப்போய் அவஸ்தைப்பட்டு, நாய், கழுதையாய்ப் பிறப்பதைவிட, காசியில் போய் இறந்து விட்டால் ஒரு பயலுடைய தயவுகூட இல்லாமல் மோக்ஷம் கிடைத்துவிடும் என்பது உறுதி.

அன்றியும் அவனவன் வந்த காரியத்தைப் பார்க்க வேண்டாமா? எவ்வளவு காலத்துக்குத்தான் இந்தப் பூலோகத்தில் இருந்தாலும் என்ன பயன்?

சு. ம:— ஓ ஹோ! அப்படியா சங்கதி? மனிதன் என்ன பாவம் செய்தாலும், எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் திதி செய்யப்படுவதாலோ, காசியில் போய்ச் செத்துப்போவதினாலோ மோட்சத்துக்குப் போய்விடுவானாக்கும்!

அன்றியும் மனிதன் எவ்வளவு யோக்கியமாய் நடந்திருந்தாலும், எவ்வளவு புண்ணியம் செய்தவனாய் இருந்தாலும் அவன் இறந்துபோன பிறகு, அவனது பிள்ளைகளோ, சந்ததியார்களோ செய்த குற்றத்துக்காக (திதி செய்யாததற்காக) நரகத்துக்குப்போவதுடன், நாய், கழுதையாய்ப் பிறப்பானாக்கும்.

இது என்ன நீதி? என்ன சாஸ்திரம்? எந்தக் கடவுளுடைய உத்திரவோ தெரியவில்லை. அதிருக்கட்டும், தாங்கள் எதற்காக இந்தப் பூலோகத்துக்கு வந்தீர்கள்? அது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே!

பு. ம:— மனிதன் எதற்காகப் பிறந்தான்? ஸ்ரீமந் நாராயணனைப் பக்தி பண்ணவும், பூஜிக்கவும், அவன் பாதாரவிந்தம் அடையவும்தானே? இதுகூடவா மனிதனுக்குத் தெரியாது?

சு. ம:— அப்படியா? தாங்கள் நாராயணன் பாதாரவிந்தம் சேருவதற்கும், தங்கள் பிள்ளைகள் எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்கும், நீங்கள் கயாவுக்கும், காசிக்கும் போவதற்கும், காசியில் சாவதற்கும் எப்படி அய்யா சம்பந்தம் இருக்கமுடியும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! சற்று விவரமாய்ச் சொல்லுங்கள்! நானும் தங்களுடனேயே புறப்பட்டு விடுகிறேன். எனக்கு மாத்திரம் மோட்சம் வேண்டாமா? நாராயணனுடைய பாதாரவிந்தம் வேண்டாமா?

பு. ம:— இதெல்லாம் எவ்வளவு சொன்னாலும் உங்களுக்குச் சுலபத்தில் புரியாது.

சு. ம:— பின்னை எப்படித்தான் புரியும்? அதன் இரகசியத்தைக்கொஞ்சம் சொல்லுங்களேன்! என் ஆத்மாவும் முக்தியடையட்டும்

பு. ம:— உங்களுக்குப் புரியவேண்டுமானால் கல்ல குரு கடாட்சம் வேண்டும். பெரியோர்கள் சாவகாசம் வேண்டும். முன்னோர்கள் நூல்களைப் பார்க்கவேண்டும். சாஸ்திரங்களில் பரீக்ஷை இருக்கவேண்டும். புராணங்களை மரியாதை செய்யவேண்டும். பக்தி சிரத்தையுடன் அவைகளைப் படிக்க வேண்டும். எதற்கும் பிராப்த கருமம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் அனுகூலமாக பகவான் கடாட்சம் இருக்க வேண்டும். இப்படிக்கெல்லாம் இல்லாமல் சும்மா ஒருவரைப் பார்த்து ஒருவர் ஆசைப்படுவதனாலேயே, முக்தி என்பது எல்லாருக்கும் கிடைத்துவிடக்கூடிய காரியமல்ல

சு. ம:— இப்போது எனக்கு ஆசைவந்துவிட்டது. நான் கொஞ்சம் கூட சுயமரியாதைக்காரர்களுடன் சாவகாசமே வைத்துக்கொள்வதில்லை. தாங்கள் சொன்னபடியே கடந்து, நானும் நாராயணன் திருவடியை அடைந்தாகவேண்டும். தாங்களே எனக்கு கல்ல குருவாகவும், நேசத்திற்கேற்ற பெரியோராகவும் இருந்து உபதேசம் செய்யவேண்டும். மற்றபடி முன்னோர்கள் நூல்கள் என்றீர்களே! அவர்கள் எவ்வளவு காலத்துக்கு முன்னோர்களாயிருக்கவேண்டும்? அவர்களில் சிலருடைய பெயர்களையாவது சொல்லுங்கள்! அவர்களது நூல்களுடைய பெயர்களையும் சொல்லுங்கள்! அந்தப்படியே செய்யப்பார்க்கிறேன்.

பிறகு சாஸ்திரங்களின் பரீக்ஷை என்றால் என்னென்ன சாஸ்திரங்கள்? அவைகளை எப்படிப் பரீக்ஷிப்பது? தயவு செய்து அதையும் கடாட்சிக்கவேண்டும்.

புராணங்களை மரியாதை செய்வது என்றால் எப்படி மரியாதை செய்வது? விழுந்து கும்பிட்டால் போதுமா? அல்லது அவைகளில் உள்ள விஷயங்களை எல்லாம் அப்படியே கம்பி ஆகவேண்டுமா? மற்றும் பக்திசிரத்தையோடு படிக்க வேண்டும் என்றால் பணம் கொடுத்து வாங்கி, குளித்து முழுகி விட்டுப் புராணங்களுக்குத் தீபதூபம் வைத்து பூஜை செய்து தானே படித்தால் போதுமா? அல்லது வேறு யாருக்காவது பணம் கொடுத்துப் படிக்கவைக்க வேண்டுமா? என்பதையும் அருள வேண்டும்.

அன்றியும் எனக்குப் பிராப்த கர்மம் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படி அறிவது? இவ்வளவான பாடு பட்டும் பிராப்த கர்மம் இல்லா விட்டால் எல்லாம் வீண் செலவாகவும், வீண் கஷ்டமாகவும் ஆகிவிடுமே! அது மாத்திரமல்லாமல், அதாவது பிராப்த கர்மம் இருக்கா—இல்லையா? என்று அறிவது மாத்திரமல்லாமல், பகவான் கடாக்ஷம் வேறு இருக்க வேண்டும் என்று முடிவாய்ச்செல்லிவிட்டீர்களே! அதை எப்படித்தெரிந்து கொள்ளுவது? இதை அறியாமல் கடைசியாய்ச்செய்த காரியமெல்லாம் வீணாய்ப்போகும்படி விட்டுவிடக்கூடாதே என்கின்ற கவலை அடியேனுக்கு அதிகமாய் இருக்கிறது. ஆதலால் குருசுவாமிகள் இவற்றையெல்லாம் கடாக்ஷத்தருளுவதுடன், தங்களுக்குப் பிராப்த கருமம் இருப்பதும், பகவான் கடாக்ஷம் இருப்பதும் எப்படித் தெரியவந்தது? என்பதையும் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

பு. ம:— சரி! சரி!! விளங்கிவிட்டது. நீரும் பக்காச் சுயமரியாதைக்காரன் என்பது நன்றாய் விளங்கி விட்டது! அவன் களுக்குத்தான் இந்த குயுக்தியான பேச்சுகளும், போக்கிரித்தனமான பேச்சுகளும் பேசத்தெரியும். உம்மிடத்தில் பேசுவதில் பயனில்லை போம்!

சு. ம:— என்ன சுவாமீ! இவ்வளவு சங்கதைகப்பட்டு விட்டீர்கள்! நான் தங்களைக் குருவாக அடைந்து விட்டேன் என்று சொன்னேனே! தங்களிடத்தில் அல்லாமல் வேறு யாரிடத்தில் எனது முக்திக்கு வேண்டிய விஷயங்களையும், சங்கதைகளையும் கேட்டுத்தெளிவடைவது?

பு ம:— வேண்டாமையா! நான் உமக்குக் குருவாகவும் இல்லை; என்னை எவ்விதக் கேள்வியும் கேட்க வேண்டாம்; என்னோடு கூட நீர் வரவும் வேண்டாம். நீர் சரியான சுயமரியாதைக்காரர் என்பதில் ஆக்ஷேபனையில்லை.

உம்மைப்போன்ற ஆள்களால் தான் என் பிள்ளைகள் கெட்டு இந்தப்படி நாசமாய் விட்டதுகள். சரி! போம்! போம்! இங்கே நில்லாதேயும்.

சு. மை:— சுவாமிகளே கோபிக்காதீர்கள்! தங்களுக்கு வருத்தம் வருவதானால் நான் பேசவேயில்லை, வாயை மூடிக்கொள்ளுகிறேன்.

ஒரு சமயம் நான் மோக்ஷமடைய பிராப்த கர்மம் இல்லையோ; என்னமோ தெரியவில்லை. தங்களைப்போன்ற பெரியார்களைக் குருவாக அடைந்தும் இப்படியாகிவிட்டது. என் சங்கதியைப் பின்னால் பார்த்துக்கொள்ளுகிறேன். தங்கள் விஷயத்தில் ஒரு சிறு சந்தேகம்! அதைக் கேட்கலாமா என்பதை எதிர் பார்க்கிறேன். அதை நிவர்த்தி செய்தால் திருப்தியாவேன்.

பு. மை:— என்ன ஐயா சந்தேகம்?

சு. மை:— இல்லை சுவாமிகள்! இவ்வளவு தீர்மானத்துடனும், உறுதியுடனும், பிடிவாதத்துடனும் இந்த முதிர்ந்த வயதில் முக்திக்காகப் போகின்றீர்களே, போகும் வழியில், காசி கயாவைப் போய் சேருவதற்குமுன் வழியில் ஏதாவது கேர்ந்து, தாங்கள் சாகவேண்டி ஏற்பட்டுவிடாமல் இந்த உத்தேசங்கள் எல்லாம் என்ன ஆகிறது? நீங்கள் தான் திரும்பி வரப்போவதில்லையே பிறகு இன்று வாங்கும் கடனை யார் கட்டுவது?

பு. மை:— நான் செத்துப்போய்விட்டால் கல்ல காரியமாச்சுது! போம் வெளியே! இங்கே நில்லாதேயும்! பயணம் புறப்படும்போது சகுனத்தடைமாதிரி! வாயில் வரும் வார்த்தையைப்பாருங்கள்! மனிதனுக்குளதாவது புத்தியிருக்கிறதா? கடனைப்பற்றி நீர் கவலைப்படவேண்டியதில்லை. அடுத்த ஜன்மத்தில் மாடாய் பிறந்தாவது அவன் கடன் கட்டிவிடுவேன்.

சு. மை:— சரி! சரி!! கோபித்துக்கொள்ளாதீர்கள்! நான் இதோ போகிறேன்! நீங்களும் உங்கள் சாஸ்திர புராணங்களும், அதற்கு நீங்கள் செய்யும் மரியாதைகளும் மிக நன்றாய் இருக்கிறது! இனி உங்களைப்போன்ற புராணமரியாதைக்காரர்களே மோக்ஷத்துக்குப் போகட்டும், அதற்காக கடன் கொடுத்தவன்கள் எல்லோரும் அடுத்த ஜன்மத்திலேயே வசூல் செய்யட்டும். ரொம்ப காணயம் தான்.

ஜீன் மெஸ்லியர்.

ஜீன் மெஸ்லியர் என்பவர் "பகுத்தறிவு, அல்லது கத் தோலிக்க குருவின் மரண சாசனம்" என்னும் சிறந்த நூலை எழுதிய ஆசிரியர் ஆவார். இவர் 30-வருஷ காலம் ரோமன் கத்தோலிக்க குருவாயிருந்தார். மதக் கட்டளைகளின் போ லித்தன்மையை கன்றாக உணர்ந்து, தனது இறுதிக்காலத்தில் "பகுத்தறிவு" என்ற பெயருடன் தனது மரண சாசனத்தை எழுதிவைத்தார். பிரஞ்சு பாஷையில் எழுதப்பட்ட அந் நூலை அவருடைய மரணத்திற்குப்பின்னர் பல பாஷைகளி லும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. அந்நூலை

ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர், மிஸ். ஆனாநூப் என்னும் பெண்மணியாவார். ஆங்கில நூலின் முதற் பாகத்தை நமது தோழர் S குருசாமி அவர்கள் தெளிந்த-இனிய..சுலபமான தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இது நமது பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஞான சூரியனாக நின்று மக்களின் அறியாமை இருளைப் போக்கிவரும் இந்நூலை ஒவ்வொருவரும் கற்கவேண்டியது அவசியமாகும்.

இத்தகைய பேர் அறிஞர் ஜீன் மெஸ்லியரின் வாழ்க்கைச் சரிதம் வருமாறு:—

"ஜீன் மெஸ்லியர் 1678-ம் ஆண்டில் மாஸர்னி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரது தகப்பனார் ஒரு கைவுக்காரர். கிராமத்தில் வளர்த்து வந்தபோதிலும் ஜீன் மெஸ்லியர் தத்துவ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களைப் படித்துப் படிப்படியாய் குரு ஸ்தானத்தை அடைந்தார். சிறு வயதிலிருந்தே கற்குணங்களும், கல்லொழுக்கங்களும் உடையவராதலால், அவர் குரு நிலைமையை அடைந்தும் கூட அதே குணங்கள் அவரிடத்தில் காணப்பட்டது ஆச்சரியமல்ல. அவர் தனது கடமைகளில் சிறிதும் தவறுவதேயில்லை. தன் சம்பளத்தில் மீதிப்பட்டதை ஏழைகளுக்குக் கொடுத்து உதவினார். அவருடைய இரக்கமான மனதிற்கும், குறையாத அன்பிற்கும் அவருடைய வாழ்க்கையிலிருந்து பல திருஷ்டாந்தங்கள் கூறலாம்

ஒரு சமயம் அவருடைய கிராமத்திலிருந்த பிரபு ஒருவர் சில விவசாயிகளைத் துன்புறுத்திய காரணத்திற்காக, ஜீன் மெஸ்லியர் அவருக்காகக் கடவுள் வணக்கம் செய்ய மறுத்து விட்டார். இவ்விஷயத்தை அப்பிரபு மேலதிகாரிக்குத் தெரிவித்து ஜீன் மெஸ்லியரைப் பல வழிகளிலும் கொடுமைப்படுத்தினார் "ஏழைகள் பணக்காரர்களிடத்தில் படும் கஷ்டத்திற்கு இதுவே ஒரு உதாரணம். ஆனாலும், பிரபுவைக் கடவுள் மன்னிப்பாராக; ஏழைகளைத் துன்புறுத்தாதவாறு நல்ல குணங்கள் அவருக்கு அமையவேண்டுமென்பதே எனது விருப்பம்," என்று ஜீன் மெஸ்லியர் பொறுமையாகப் பதிலளித்தார்.

ஜீன் மெஸ்லியர் 1733-ம் ஆண்டில் தனது 55-வது வயதில் காலஞ்சென்றார்.

அவர் இறந்ததும் சில கையெழுத்துப்பிரதிகள் அவரிடமிருந்து அகப்பட்டன. ஒவ்வொன்றும் 366 பக்கங்கள் கொண்டதாய் 3 ஏகல்கள் கொண்ட அப்பிரதிகள் முழுதும் அவரது கையாலேயே எழுதப்பட்டிருந்தன. அவைகளின்மேல் ''எனது மரண சாஸனம்'' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. இம்மூன்று ஏகல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரிடம் போய்ச் சேர்ந்தது. கௌண்ட் கைலஸ் என்பவர் சில நாட்களுக்குள் அதில் 100 காப்பிகள் எடுத்துப் பார்ஸ் நகரில் பரவச் செய்தார்.

ஜீன் மெஸ்லியர் தான் எழுதிய மூன்று ஏகல்களையும் ஒரு பழுப்பு நிறமான காகிதத்தில் சுற்றிவைத்திருந்தார். அக் காகிதத்தின்மீது அவர் எழுதியிருந்ததாவது:—

''மனிதர்களுடைய அக்கிரமங்களையும், குற்றங்களையும், கொடுமைகளையும், அறிவீனச் செயல்களையும் என் ஆயுள் முழுதும் கண்டுணர்ந்தேன். அவைகளை நான் நாம்பவும் வெறுத்தேன். ஆனால் நான் இருந்த நிலையில் அவைகளை வெளிப்படையாய்ச் சொல்வதற்கான தைரியமும், சந்தர்ப்பமும் எனக்கில்லை என்பதை நான் கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் நான் இறந்துபோவதற்குமுந்தியாவது, நான் கண்ட உண்மைகளை உலகத்திற்குச் சொல்லிவிட்டு உயிர் விடவேண்டுமென்று நினைத்திருந்தேன். அந்த ஆசை நிறைவேறிவிட்டது. தானும் மனத்திருப்தியோடு உயிர் விடுகிறேன்.''

''நான் ஏதேனும் சொந்தப் பிரயோஜனத்தைக் கருதி இவ்வாறு மன மாற்றத்தையடையவில்லை என்பதை உங்களுக்கு உறுதியாய்க் கூறுகிறேன். ஆனால் எனது உணர்ச்சிக்கு முற்றிலும் மாறான ஒரு வேலையை என் ஒப்புக்கொண்டேன் என்றால், எதாவது பொருள் திரட்டும் நோக்கத்தினாலல்ல. பின் எதனால் என்றால், எனது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவது என் கடமை என்று நினைத்தேன். ஆனாலும் அதைவிட்டு வெளிப்பட்டு உண்மையை உரைத்து விடவேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. ஆனால் முதலிலேயே அப்படிச் செய்திருந்தால், எனது முழு அபிப்பிராயத்தையும் உலகத்திற்குச் சொல்லுவதற்கு முன்பே நான் கொல்லப்பட்டிருப்பேன்.''

''கடவுள் கிருபையை விலைக்கு வாங்குவதற்காகவென்று பாமர ஜனங்கள் பணத்தைக்கொண்டு வந்து கொட்டியதை நான் வெறுத்தேன். பல சமயங்களில் அதை ஏற்றுக்கொள்

ளவும் மறுத்தேன். ஐயோ! என்ன கொடுமை! பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாய், குருவின் பாதத்தில் பணத்தைக் கொட்டி தங்களுக்காக கடவுளை வணங்குமாறு கேட்கிறார்களே, என்பது எனக்கு அவ்வளவு வருத்தமாயில்லை. ஆனால், படுபாவிகளான குருமார்கள் தாங்கள் செய்வது பெரும் ஏமாற்றம் என்பதை மனப்பூர்வமாக அறிந்திருந்தும் கூட பண ஆசையாலும், அதிகார அவாவினாலும் அதைச் சந்தோஷமாய் அனுமதித்துக்கொண்டும், அனுபவித்துக்கொண்டும் இருக்கிறார்களே, என்பதுதான் என் உடலை நடுங்கச் செய்கிறது. குருமார்கள் தங்களுடைய நோகாத வாழ்க்கையை நினைத்துச் சந்தோஷப்பட்டாலும் படட்டும்; ஆனால் அதற்காகப் பாமர ஜனங்களை,-சூதுவாதறியாத ஏழை ஜனங்களை மேலும் மேலும் குற்றங்கள் செய்யும்படி தூண்டுகிறார்களே, என்பதானது எனக்குச் சகிக்கமுடியவில்லை.''

''ஓ! எனது கிராம ஜனங்களே! உங்களிடம் எவ்வளவு தடவைகளில் பணம் பெறாமல் போதித்தேன். இன்னும் ஒரு தம்பிடி கூட வாங்காமல் போதிக்கக்கூடிய சக்தியில்லையே என்று எத்தனை தடவை உங்கள் முன் கதறியிருக்கிறேன்! நினைத்துப்பாருங்கள்! உங்கள் மதத்திலுள்ள ஆபாசங்களை எத்தனை சந்தப்பங்களில் சொல்லியிருக்கிறேன்! பக்தி மார்க்கமான பொய் மூட்டைகளை உங்கள் தலையில் கட்டியடித்ததற்காக, எத்தனை தடவைகளில் நான் எனது மார்பை அடித்துக் கொண்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? காணே கம்பாத விஷயங்களையெல்லாம் வெள்ளை மனதான உங்களை நம்பும்படி செய்தேனே! அக்கொடுமையை நினைத்து நினைத்து எத்தனை தடவை வெட்கியிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நான் செய்த மதப் புரட்டுகளை ஒரு பொது மேடையில் உங்கள் முன்பு சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று சுமார் ஆயிரந்தடவை முயற்சித்திருப்பேன். ஆனால் எனது பலத்தை மீறிய பயமானது இந்த நிமிஷம் வரையில் என் வாயை அடைத்துவிட்டது. நானும் உங்களை இருட்டிலேயே விட்டிருந்தேன. நான் ஒரு படுபாவி என்றே நினைக்கிறேன் மன்னியுங்கள். இந்த நிமிஷத்திலாவது உண்மையை-என் மனதில் இத்தனை வருஷமாய் அடைபட்டுத் திமிறிக்கொண்டிருந்த உண்மையை உங்கள் முன் கொட்டிவிட்டுச் சாகின்றேன் கவனியுங்கள்.'' என்று சொல்லி உதாரணங்கள் மூலமாக விஷயங்களை விளக்குகிறார்.''

இவருடைய நூலாகிய பகுத்தறிவு அல்லது மரண சாஸனம் என்பதைப்பற்றி அறிஞர்கள் கூறியிருக்கும் சில அபிப்பிராயங்கள் வருமாறு:—

"இப்புத்தகத்தைப் படித்தவர்கள் எல்லோரும் இதன் உண்மைகளில் முற்றிலும் திருப்தியடைந்துவிட்டார்கள் என்பதை என் கண்முன்னே கண்டேன். இம்மனிதன் சாமான்யனல்ல. தர்க்கங்களைக் கிளப்பிவிட்டு ருசுப்படுத்திக் காட்டுகிறார். ஜீன் மெஸ்லியருடைய மரண சாஸனமானது, உலகில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் அளிக்கப்பட்ட ஒரு பெருஞ் செல்வமாகும். ஆகவே உண்மையை நாடும் ஒவ்வொரு ஆண் பெண்ணிடமும் இப்புத்தகம் இருக்கவேண்டியது அவசியம்! அவசியம்!! அவசியம்!!! என்று சொல்லுவேன்" என்று பிரஞ்சு தேசத்து அறிஞர் வால்டையர் கூறுகிறார்.

"யோக்கியமான குருவாகிய ஜீன்மெஸ்லியரால் எழுதப்பட்ட இப்புத்தகமானது சென்ற நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சிகளுள் மிகவும் அதிசயமானதும், அதிக ஆபாசமானதுமான நிகழ்ச்சியாகும். "பெயின்" "வால்டையர் முதலியவர்கள் சில விஷயங்களை மறைத்து வைத்தார்கள். ஆனால் ஜீன் மெஸ்லியர் அவ்விதம் செய்யவில்லை. அவர் ஒன்றையும் ரகசியமாய் வைத்துக்கொள்ளவில்லை" என்று ஜேம்ஸ் பார்டன் என்பவர் எழுதியிருக்கிறார்.

"மதக்கூட்டத்தினரெல்லாம் இயற்கைக்கு அதிசயமான அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமை, தங்களிடம் இருக்கிறதாகச் சொல்லுகிறார்களே ஒழிய அந்த அற்புதங்களின் உதவியினாலோ, அல்லது உதவியில்லாமலோ ஜீன் மெஸ்லியருடைய ஒரு சிறிய கேள்விக்குக்கூட அவர்களால் பதில் சொல்லமுடியாது போயிற்று" என்று பிட்டர் எக்களர் என்பவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறு அறிஞர்களால் பாராட்டப்பட்ட ஜீன் மெஸ்லியருடைய புத்தகத்தின் பெருமை அளவு கடந்ததாகும். மதவாதிகளின் புரட்டுகளையும், கடவுள் கொள்கையின் போலித்தன்மைகளையும் கன்கு அறியலாம்.

குறிப்பு:— இப்புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு முதல் பாகம் விலை அணா 4.

குடி அரசு பதிப்பகத்திலும், பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்திலும், குடி அரசு பகுத்தறிவு ஏஜண்டுகளிடத்திலும் கிடைக்கும்.

தப்பித்துக்கொண்ட ஜதுயதாயகி.

(S. C. பரன்.)

I

அழகு நத்தம் என்பது ஒரு சிறு கிராமம். பெயருக்கேற்ற பொருத்தமுள்ள ஊர்தான். சுற்றிலும் தோப்புகள், ஆதன் வட புறத்தில் வெண்ணாறு ஓடுகிறது. சுமார் 60, 70 வீடுகளே உள்ளன. ஊருக்குள் நாற்புறமும் படித்துறைகள் கட்டப்பட்ட குளம் ஒன்றுண்டு. ஆதன் பக்கத்தில்தான் அவ்வூர் ஜமீன்தார் பங்களா கட்டப்பட்டிருக்கின்றது.

ஜமீன்தார் கொஞ்சம் கர்னாடகப் போர்வழியானாலும் பங்களாவின் கட்டியும், அதனுள் செய்யப்பட்டிருக்கும், ஜோடினை களும் இங்கிலீஷ் முறையில் இருந்தது.

ஜமீந்தார் என்றாலே அந்தப்பக்கத்தில் உள்ளவர்களுக்கெல் லாம் நன்றாகத்தெரியும். அவருடைய சுருக்கமான பெயர் தேவர் பகதூர்; முழுப்பெயர் வெகு நீளமானது. அதை யாரும் சொல்லு வதில்லை. ஆனாலும் உங்கள் நூபகத்துக்காக அந்தப்பெயரைச் சொல் லிவிடுகிறேன். அதுதான் "ஜெயங்கொண்ட மகிபதி வீரமார்த் தாண்ட வல்லாளகண்ட தேவர் பகதூர்" என்பது.

அழகிய நத்தத்தில் ஒரே கோயில்தான். அதையே கிராம தேவதையாகக் கொண்டு நடுவார்கள் அவ்வூரினர். அதன் பெயர் பச்சையம்மன் கோயில் என்பது. அதற்கு வருஷத்திற்கு ஒரு முறை தவராமல் திருவிழா செய்வதுண்டு. இதில் ஜமீந்தாருக்கு சிரத்தையதிகம். திருவிழாவென்றால் சாமான்யமாக இருக்காது. ஊரெல்லாம் ஏக தடபுடலாக இருக்கும். வெளியூர்களிலிருந்து ஏராளமான கடைகள் வந்திருக்கும். ஜனங்களும் ஏராளமாக வரு வது போவதுமாக இருப்பார்கள். வருஷத்தில் பத்து நாட்கள், இம்மாதிரி ஊர் அல்லோல கல்லோலமாகப்பட்டுக் கிடக்கும்.

இதற்கெல்லாம் காரணம், பத்து நாட்களும் கோவிலில் நடை பெறும் விமரிசையேயாகும். அதுவும் என்ன விமரிசை? நல்லப் பாட்டுக்கச்சேரிகள்! கச்சேரிக்கு வருபவர்கள் பெரும்பாலும் பெண் மக்கள்தான். நல்ல சதுர்க்கச்சேரிகள்! நல்ல மேளக் கச்சேரிகள்

இரவில் சுரண வேடிக்கைகள் இவைகளெல்லாம் இருந்தால் கேட்கவேண்டுமா கூட்டம் சேருவதற்கு?

ஜமீந்தாரைக் கண்டால் அவ்வூரினர் நடுநடுங்குவார்கள். அவர் களெல்லாம் அவருக்கு அடக்கமானவர்கள். அவருடைய குடிகள் அவரிட்ட வேலையைத் தட்டாமல் செய்யவேண்டும். தவறினால் அடியோ! உதையோ! அபராதமோ! ஊரைவிட்டுத் தூரத்தவோ! ஏதாவது ஒன்று கட்டாயம் நடந்துதான் தீரும்.

மனிதர் விஷயத்தில் கொஞ்சங்கூட பச்சாதாபம் இல்லாதவர். ஆனால் கோயிலுக்குச் செலவு செய்வதில் மகா கருணாசாகர். அவருடைய தெருங்கிய சினேகிதர்களில் சிலர் சொல்லியும் பார்த் துவிட்டார்கள். இம்மாதிரி ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக் கான ரூபாய்களைச் செலவு செய்வதில் என்ன லாபம்! அந்த ரூபா யிகளை ஏழை ஜனங்களின் நன்மைக்குச் செலவு செய்வது எவ்வள வோ விசேஷம் அல்லவா? என்று சொன்ன வார்த்தைகள் அவர் கா தில் நுழைவதேயில்லை.

வழக்கம் போல் சித்திரை மாதம் திருவிழா நடைபெற்றது. மாமூல்படி கச்சேரிகள் நடைபெற்றன. ஜமீந்தார் வீட்டில்தான் கச்சேரிக்கு வரும் பெண்களுக்கு ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது. கேட்கவேண்டுமா? ஜமீந்தாரின் குதூகலத்திற்கு ஆளேது? திருவிழா நடத்துவதன் பலனை ஜமீன்தார் மனமொழி மெய்களால் அனுபவித்து வந்தார்.

ஜமீந்தாருக்கோ வயது 60 இருக்கும். மூன்று மனைவிகள் இருக்கின்றனர். பிள்ளை ஒன்றேனுமில்லை. ஆரடி உயரம் உள் ளவர்; உயரத்திற்குத்தகுந்த பருமன். வெள்ளிக் கம்பிகளை முறுக்கி வைத்தது போன்ற கைப்பிடிக்கடங்காத மீசை. இயற்கைப் பற்கள் அடியோடு போய்விட்டாலும் செயற்கைப் பற்கள் வெள்ளை வெ ளேரென்று இருந்தன.

திருவிழாவின் கடைசி நாளில், ஜமீந்தார் கோயில் முன் மண் டபத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். மேளக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ஏராளமாக ஜனக்கூட்டமிருந்தது. ஜமீந்தா ரின் கண் மாத்திரம் எங்கேயோ கவனித்துகொண்டிருந்தது. அங் கே வெளியூரில் இருந்து வந்திருந்த ஒரு பதினாறு வயது மங்கை மீதுதான் அவர் கண் சென்றது. உடனே பக்கத்திலிருந்த தனது அந்தரங்கவேலைக்காரனுக்கு அப்பெண்ணின் ஊர், பெயர், பெற் றோர் முதலியவர்களைப் பற்றி விசாரிக்கும்படி ஏற்பாடு செய்தபின் திருவிழாவும் சிறப்பாக வழக்கம் போல் முடிந்தது.

II

மகர் நோம்புச்சாவடி என்பது தஞ்சையின் ஒரு பகுதியாகும். அங்குதான் விருத்தாஜல தேவர் வசித்து வருகிறார். அவருக்குக் கொஞ்சம் பூஸ்திதி யுண்டு. எப்பொழுதுமே அவர் பணம் என்றால் கொஞ்சம் மோகம் உள்ளவர். சுருங்கச்சொன்னால் பணத்திற்காக எந்தக்கியாகமும் செய்யத் தயாராய் இருப்பவர்.

அவருக்கு ஒரே பெண், அப்பெண் பெயர் தையனாயகி, மூன்றாவது பாரம் வரையில் படிக்கவைத்திருந்தார். நல்ல அழகுடையவள், சங்கநிறம், கண் கவரும் முகம், நீண்—கன்ற விழிகள், சிவந்த கன்னங்கள், பதினாறு வயது நிறைந்து ஜொலிக்கின்றாள். அவளுடைய தாய்க்கு தையனாயகியை, உத்தியோகத்தில் இருக்கும் யோக்கியமான ஒரு வரவிபனுக்கு மணஞ்செய்து கொடுத்துவிட்டால் போதும் என்ற ஆசை. தந்தையோ, யாராயிருந்தாலும் பெரிய பணக்காரனுக்கே அவளைக் கொடுக்கவேண்டும் என்று எண்ணியிருந்தார். இச்சமயத்தில் நமது ஜமீன்தார் தேவர் பகதூர் கிராக்கி வந்தது. விடுவாரா விருத்தாஜலத்தேவர்.

குறிப்பிட்டிருந்த ஒரு நாளில் தேவர் பகதூர் மகர் நோம்புச் சாவடிக்கு வந்தார். தேவரும் எதிர்கொண்டழைத்து வீட்டில் விருந்தளித்தார். அன்று தையனாயகியே பரிமாறினாள். பாவம்! அவள் ஒன்றும் அறியாள்! ஜமீன்தார்—பெரியமனிதர் வந்திருக்கிறார். அவருக்கு மரியாதை செய்யவேண்டும் என்று அப்பா விரும்புகிறார். ஆதலால் நாமும் மரியாதையாக நடந்துகொள்வோம் என்று தான் அன்று தையனாயகி வெகு அடக்க ஒடுக்கமாக இருந்தாள்.

ஜமீன்தாருக்கோ அளவுகடந்த சந்தோஷம். அவருடைய கர்வம் தலை சுற்றும்படி செய்து விட்டது. உண்மையில் தையனாயகி தன்னைக் காதலிப்பதாகவே நினைத்துக்கொண்டார். அவர் அடிக்கடி தனது மீசையை முறுக்கிக்கொள்ளுவார்; அங்கவஸ்திரத்தைச் சரியாக எடுத்துப் போட்டுக்கொள்ளுவார்; கனைத்துக்கொள்ளுவார்; சிரித்துக்கொள்ளுவார்; சுற்றும் முற்றும் கம்பீரமாக நிமிர்ந்து பார்ப்பார்; இம்மாதிரி அன்று அவருடைய கோலமும், செய்த கூத்தும் பார்க்கச் சகிக்கமுடியாமலிருந்தது.

கடைசியாக ஜமீன்தாரும், தேவரும் கல்யாண சம்பந்தமாக முடிவு செய்து கொண்டனர். தேவருக்கு கல்யாணச் செலவுள்பட முப்பது ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்றும், வைகாசி மாதம்

28-ஆம் தேதியில் கல்யாணத்தை நடத்தி விடுவதென்றும், கல்யாணத்தை மகர்நோம்புச் சாவடியில் தேவர் வீட்டிலேயே வைத்துக் கொள்ளுவதென்றும் பேசி முடித்துக்கொண்டார்கள். ஜமீன்தார் அன்று மாலையே மிகுந்த சந்தோஷத்துடன் தேவரிடமும், அவர் மனைவியிடமும், தையனாயகியிடமும் விடைபெற்றுக்கொண்டு ஊர்போய்ச் சேர்ந்தார். தந்தை செய்திருக்கும் ஏற்பாடு முழுவதும் தையனாயகிக்கு மறுநாள் எப்படியோ தெரிந்து விட்டது.

III

கமலநாதன் 20-வயதுள்ள வாலிபன். தையனாயகியின் தாய் மாமன். கட்டமைந்த சரீரமுடையவன்; மிகுந்த புத்திசாலி; பொதுஜன ஊழியம் செய்யவேண்டும் என்பதில் அளவுகடந்த ஆர்வம் உடையவன்; இன்டர்மீடியட்டோடு படிப்பை நிறுத்திவிட்டான். அவன் இப்பொழுது தஞ்சாவூரில் உள்ள ஒரு பேங்கில் கிளார்க்காக வேலை பார்த்துக்கொண்டு வருகிறான். அவனும், தையனாயகியும் பால்ய முதல் ஒன்றாக இருந்து, உண்டு, உடுத்து விளையாடிப் பழகியவர்கள். கமலநாதன் மீது தையனாயகியின் தாய்க்கும் அளவுகடந்த அன்பு. தேவரும் அவன் மீது பிரியங் கொண்டிருந்தார். தையனாயகிக்கும் கமலநாதனுக்கும் இடையில் வளர்ந்துவந்த அன்பைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. ஓவ்வொரு நாளும்இருவரும் மாலையில் சந்திக்காமலிருப்பதில்லை.

வழக்கம்போல் ஜமீன்தார் வந்துபோன மறுநாள் மாலை கமலநாதன் தேவர் வீட்டிற்கு வந்தான். தேவர் வெளியில் சென்றிருந்தார். தையனாயகியின் தாயார் கொல்லைப்புறத்தில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். தையனாயகி மாத்திரம் தனியாகத் துக்கத்துடன் இருந்தாள்.

"தையனாயகி! என் இன்று ஒரு மாதிரியாக இருக்கின்றாய்! எப்பொழுதும் உள்ள சந்தோஷத்தைக்காணோமே! என் மீது ஏதாவது வருத்தமா?" என்றான்.

"இல்லை மாமா! தங்கள் மீது எனக்கு என்ன வருத்தம்! இன்னும் கொஞ்ச நாளில் எனது வாழ்வு பாழாகப் போகிறதை எண்ணித் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"அப்படி யென்ன வந்து விட்டது? ஏன் என்னுடைய மனம் புண்ணாகும்படி இப்படிப் பேசுகிறாய்! உனக்கென்ன பைத்தியம் பயித்தியம் பிடித்துவிட்டதா? அல்லது தமாஷ் பண்ணுகிறாயா?" என்று சிரித்துக்கொண்டு கேட்டான்.

"மாமா! ஒன்றும் தமாஷ் இல்லை. நான் சொல்லுவது முழுவதும் நிஜம். அன்று திருவிழாப் பார்க்க அப்பா அழைத்துக் கொண்டு போனாரே! அந்த ஊர் ஜமீன்தாரனாம், ஒரு கிழட்டுப் பிணம், அவனுக்கு என்னைப் பலிகொடுக்க ஏற்பாடு செய்தாகிவிட்டது. எனக்கு விலை 30 ஆயிரம் ரூபாயாம், எல்லாம் நேற்று சாயங்காலம் தீர்மானம் ஆகிவிட்டது. அம்மா ராத்திரி முழுதும் எவ்வளவோ தடுத்துப்பார்த்தாள், அப்பா ஒரே பிடிவாதமாக இருக்கிறார். இனி நான் என்ன செய்வது?" என்றாள்.

ஓ! அவரா!! பெரிய ஜமீந்தார்தான்; ஏராளமான சொத்து இருக்கிறது. இனி உனக்கென்ன குறை? நீ ஜமீந்தாரனி ஆகப் போகிறாய்! அதன் பிறகு என்னோடு இவ்வளவு சகஜமாகப் பேசுவாயோ என்னமோ! இந்தக் காலத்தில் பணத்தைவிட வேறு என்ன பெரிது இருக்கின்றது? பணம் இருந்தால் எல்லா நன்மையும் தானே கிடைக்கின்றது. உங்கள் அப்பா கல்லக் கெட்டிக்காரராயிருப்பதனால்தான் இப்படிச் சிறந்த ஏற்பாடு செய்திருக்கிறார்" என்றான்.

இம்மாதிரி அவன் காராளமாகப் பேசினானே ஒழிய அவன் முகம் மாத்திரம் மூன்னிருந்தது போல் இல்லை. கமலாவின் வார்த்தையைக் கேட்டவுடனே அவனிடமிருந்த சந்தோஷக்களை இருந்தவிடம் தெரியாமல் ஒளிந்துகொண்டது.

கமலநாதன் வார்த்தையைக் கேட்டவுடன் "மாமா, ஆ! நீங்களும் அப்பாவுடன் சேர்ந்துகொண்டீர்களா? இனி எனக்கு யார் துணை! நான் கைவிடப்பட்டேன்" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் விட்டாள், சோர்வடைந்து கீழே சாயப் போனாள், உடனே கமலநாதன் அவள் கீழே விழாதபடி தனது இரு கரங்களிலும் தாங்கிக் கொண்டான். பிறகு ஒரு கையில் அவளைத் தாங்கி மார்போடு அணைத்துக்கொண்டு மற்றொரு கையினால் அவள் கண்ணீரைத் துடைத்தான்; தனதுமேல் துண்டின் முன்தானையில் கொஞ்சம் விசிறி களைப்பை நீக்கினான்.

அவள் கண்விழித்து மிகவும் பரிதாபமான பார்வையுடன் அவன் முகத்தை நோக்கினாள். அன்று என்றுமில்லாதபடி அவர்களுக்குள் ஒரு புதிய உணர்ச்சியுண்டாயிற்று. அப்பொழுது தையநாயகி என் கதி அதோ கதிதானா" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

கமலநாதன், "கண்மணி அஞ்சாதே! கலக்கமடையவேண்டாம். உன் விருப்பம் எதுவாயினும் நான் பூர்த்தி செய்விக்கின்

றேன். அந்தக்கிழவன் அவமானப்படும்படி செய்து விடுகிறேன். நீ யாரிடமும் ஒன்றும் பேசவேண்டாம்" என்று சமாதானம் சொன்னான். அவளும் கொஞ்சம் மனம் தேறி இருந்தாள்.

அப்பொழுதே இருவரும் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் கை விடுவதில்லையென்று உறுதி செய்துகொண்டனர். பிறகு நேரமாகிவிட்டதால் நான் நாளை வருகிறேன் என கூறிவிட்டுக் கமலநாதன் வீட்டுக்குச் சென்றான்.

IV

விருத்தாசலத் தேவர், கஞ்சையில் அங்குமிங்கும் அலைந்த வண்ணமாக இருக்கிறார். ஜமீந்தார் மாப்பிள்ளையாக வருகிறார் அல்லவா? அதற்குத் தகுந்த விசேஷ ஏற்பாடுகள் செய்யவேண்டாமா? கல்யாணத்திற்கு என்று வெகு தடபுடலாகக் கொட்டகைகள் போடப்பட்டுவிட்டன. சின்னமேளம் பெரிய மேளம் முதலிவைகள் பேசியாகிவிட்டன. கல்யாண நாள் சமீபத்துவிட்டது. திருமணப் பத்திரிகைகள் அச்சிட்டு ஊர்களுக்கெல்லாம் போய்விட்டன.

ஊரில் எல்லாம் இதே பேச்சு. ஆனால் ஒருவரும் இந்தக் கல்யாணத்தை ஆமோதிக்கவில்லை. 60 வயது கிழவனுக்கு 16 வயதுப் பெண்ணைக் கொடுக்கிறானே பாவி என்றுதான் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். விருத்தாசலத் தேவரின் நண்பர்கள் இந்தக் கல்யாணத்தைத் தடுக்க முயற்சித்தும் முடியவில்லை.

கல்யாணத்திற்கு முதல் நாளே சுற்றத்தார்கள் வந்து நிறைந்து விட்டார்கள். ஜமீன்தாரரும், இதே கவலையாக நாள் எண்ணிக் கொண்டிருந்து அவரும், தமது கர்நாடகப் பரிவாரங்களுடன் முதல் நாளே மாமனார் வீட்டிற்கு வந்துவிட்டார். மறு நாள் காலை 5-மணிக்கு முகூர்த்தம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலையில் முகூர்த்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் சாயங்கால முதலே நடைபெறுகின்றன. புரோகிதர் முதலான எல்லோரும் தயாராகக் காத்திருந்தனர்.

இரவு 12-மணி வரையிலும் எல்லோரும் குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டும், வேலை செய்துவிட்டும், கொஞ்சம் தூங்கியெழுந்திருக்கலாமென்று படுத்துக்கொண்டார்கள்.

3-மணிக்கே முகூர்த்த காரியம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. மேளவாத்தியம் டம் டம் என முழங்குகிறது.

கல்யாணத்திற்கு என்று போடப்பட்ட கொட்டகையில் மணவறை வெகு அழகாகச் சிங்காரிக்கப்பட்டிருக்கின்றது. பந்தல் முழுவதும் மின்சார விளக்குகள் பிரகாசிக்கின்றன. புரோகிதரும் தனது காரியங்களைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். மாப்பிள்ளை ஷோக்காக சவரம் பண்ணிக்கொண்டு குளித்து முழுகி உயர்ந்த ஜரிகையுடையுடனும், தமது ஜமீன்தார் உடையுடனும் மணக்கோலம் கொண்டுவிட்டார். அன்று அவருக்கு இருந்த முறுக்கு என்றும் இருந்ததில்லை. அவரும் முறுக்கேற்றும் வஸ்துவை அன்றைக்குக் கொஞ்சம் தாராளமாகவே செலுத்தியிருந்தார். அவர் பேச்சும் பார்வையும், வெகு தமாஷாகவே இருந்தது. ஏற்கனவே பெண்ணைப்பற்றி அறிந்திருந்தவர்கள் அனைவரும் மிகவும்பரிதாபத்துடன் இருந்தனர். இதற்குள், அந்தப்புறத்தில் ஒரு பரபரப்புத் தோன்றியது. அலங்காரம் பண்ணுவதற்குப் பெண்ணைத்தேடிப் பார்த்தனர். காணவில்லை. இச்செய்தி வெளியிலும் எட்டிற்று. எங்கும் பரபரப்பு! துடி துடிப்பு! மூலைக்கு மூலை விளக்குகளுடன் தேடினார்கள். நாலா திக்குகளிலும் ஆட்கள் ஓடினார்கள்.

ஜமீன்தார் முகத்தில் ஈ ஆடவில்லை. தலை கவிழ்ந்துவிட்டது. காலை 10 மணியாகிவிட்டது. பெண் கிடைத்தபாடில்லை, கல்யாண வீடு கலவர வீடாகிவிட்டது. விருத்தாசலத்தேவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவருக்குப் பயம் அதிகம்; ஜமீன்தார் எங்கே தன்னைத் தொல்லைப் படுத்துவாரோ என்ற நடுக்கம். தேவர் மெதுவாக ஜமீன்தாரையணுகி "ஐமானே! என்னை மன்னிக்கவேண்டும். யார் செய்த சூழ்ச்சியோ தெரியவில்லை. என்னையும், தங்களையும் இப்படி அவமானத்திற்கு ஆளாக்கினார்கள். எப்படியும் தையநாயகி தங்கள் மனைவியே. அவளைக் கூடியவிரைவில் தேடிப் பிடிக்கின்றேன்" என்றார். ஜமீன்தாரும் ஒன்றும்பேசாமல் தொம்ப அவமானத்துடன் ஊர் போய்ச் சேர்ந்துவிட்டார்.

"வேணும் இந்தக்கிழவனுக்கு! பணத்தாசையால் ஒரு பெண்ணைக்கெடுக்கப் பார்த்தானே! அந்தக்கிழ ஜமீன்தாரனுக்குத்தான் என்ன கேடுவந்தது! காடு வா வா என்கின்றது, வீடு போ போ என்கின்றது. இந்தக் கிழட்டுப் பிணத்துக்குக் கல்யாண இழவு வேறேயா! என்ன அக்கிரமம், இந்த அக்கிரமத்தைத் தடுக்க-அனியாயத்தைத் தடைசெய்ய ஒரு சட்டம் இல்லையா? ஏதோ ஜனங்களுக்குப் பிடிவாதமாகச் சாதிக்கப் போவதாகப் பேசும் அரசியல் வாதிகள் இதற்கொரு வழி செய்யக்கூடாதா?" என்று ஊர் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். இம்மாதிரி ஜமீன்தாரின் கல்யாணக் கூத்து முடிந்தது.

V

இந்தக்காரியம் நடந்து வருஷம் நாலைந்து ஆகிவிட்டது. இதற்குள் ஜமீன்தாரும் தான் பட்ட அலமானத்தை நினைந்து நினைந்து அதே வியாதியாய் இருந்து மாண்டுவிட்டார்.

விருத்தாஜலத் தேவருக்கு மாத்திரம் தன் மகள்மீது உண்டான ஆத்திரம் இரண்டு மூன்று வருஷம் நீங்காமலே இருந்தது. கடைசியாக அவரும் எப்படியாவது மகள் விஷயம் தெரிந்தால் போதும் என்று இருந்தார். மகள் காணாமல் போனது முதல், கமலநாதனும் காணாமற்போனதனால், இருவரும்தான் எங்கேயாவது ஓடியிருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டிருந்தார்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் இரவு மணி $9\frac{1}{2}$ இருக்கும், ஒரு வாலிபனும், ஒரு யுவதியும், ஒரு குழந்தையுடன் ஒற்றைமாட்டு வண்டியில் வந்து தேவர் வீட்டின் வாசலில் இறங்கினார்கள்.

அப்பொழுதுதான் தேவரும் அவர் மனைவியும் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டு தமது மகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். வண்டி நின்ற சத்தம் கேட்டவுடன் தேவர் அரிக்கன் லயிட்டைக் கையிலெடுத்துக்கொண்டு தெருகதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தார். அவர் மனைவியும் திண்ணையிலிருந்து கவனித்தாள்.

முதலில் ஒரு பெண் ஒரு குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கினாள். அதன் பின் ஒரு ஆடவன் இறங்கினான்.

இருவரையும் கண்டவுடன், தேவருக்கும், அவர் மனைவிக்கும் உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. பெண்ணென்று தெரிந்து கொண்டனர். கட்டித்தழுவி முத்தமிட்டனர்; கண்ணீர் விட்டனர்; மாப்பிள்ளையையும் கட்டித்தழுவிக்கொண்டார் தேவர்.

"கமலநாதா! நீ அன்று அக்காரியம் செய்யாவிட்டால், என் மகள் இன்று சகிக்கமுடியாத துக்கத்திற்கு ஆளாகியிருப்பாள். நாங்களும் துன்பப்பட்டுக்கொண்டிருப்போம். தையனாயகியை இன்று பார்ப்பதுபோல், இக்கோலத்தில் பார்க்கமுடியாமல் போயிருக்கும். விதவைக்கோலத்துடன் தான் பார்க்கும்படி நேரிட்டிருக்கும். எங்களுக்குச் சந்தோஷத்தையளித்த உன்னை வாயார வாழ்த்துகின்றோம்! என்று கூறிக்கொண்டே உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார்கள். அன்று தேவரும் அவர் மனைவியும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லைகூற எவராலும் முடியாது. அவர்கள்

இந்து மதம்.

[புரொபசர். லட்சுமிநரசு, B. A.,]

ஆன்ம நம்பிக்கை.

உலகத்திலுள்ள காடுகளில் எல்லாம், கமது காடே மிகுதியும் புரோகிதர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட காடாகும்.

"இந்து மதம்" என்பதே புரோகித ஆட்சிக்குட்படுவதுதான்.

ஹிந்து என்றாலே பிராமணனுடைய அடிமை என்றுதான் பொருள்.

ஒரு ஹிந்து என்பவன் வேதம் படித்தாலும், வேதாந்தியானாலும் பிராமணனுடைய காலில் விழுந்துதான் ஆக வேண்டும். "சிரார்த்தம்" என்பதைப் பிராமணர்கள் மூலமே செய்யவேண்டும். பிராமணனையும், பசுவையும் வணங்குவதே ஒவ்வொரு இந்துவினுடையவும் முக்கிய கடமையாக ஆக்கப்பட்டிருக்கிறது.

புரோகிதர்களுடைய ஆட்சி இருக்கும் இடங்களில் எல்லாம், மனிதனுடைய பாவங்களுக்குப் பரிகாரமும்; பிராயச்சித்தமும் இருந்தே வரும்; மனிதனுடைய வாழ்க்கையின் முக்

அன்று இரவு யாரும் தூங்கவில்லை; கமலநாதனும், தையனாயகியும் கல்யாணத்தன்று முதல் நாள், தாங்கள் ஏறபாடு செய்திருந்தபடி மோட்டாரில் திருச்சி சென்றதையும், அங்கிருந்து "இந்து சீலோன் போட் மெயிலில்"ல் புறப்பட்டுச் சிலோனுக்குச் சென்றதையும், அங்கு நாலைந்து வருஷமாக ஒரு தோட்டத்தில் வேலை பார்த்துகொண்டிருந்ததையும், பிறகு இங்கிருந்து அங்கு வேலை பார்க்கவந்த ஒருவர் மூலம் தாங்கள் மறைந்தபின் நடந்த விஷயங்களை யெல்லாம் கேள்விப்பட்டு ஊருக்கு வந்ததையும் கூறினார்கள். இன்றும் அவர்கள் குடும்பம் மகிழ்ச்சிகரமுள்ளதாக நடந்துகொண்டிருக்கிறது.

இய தத்துவமெல்லாம் பரிகாரமும், பிராயச்சித்தமுமாகவே முடியும்.

ஆகவே புரோகிதர்களை நீக்கி பார்ப்பனீய அடிமைத் தனமாகிய இந்து மதத்திலிருந்து மக்களை விலக்குவதே, பகுத்தறிவு இயக்கத்தின் முக்கியக் கொள்கையாக இருக்க வேண்டும்.

இதற்கு வெறும் படிப்புமட்டும் போதாது. பகுத்தறிவை வளரச்செய்யும்படியான பிரசாரம் பொது ஜனங்களிடையில் கடைபெறவேண்டும்.

ஒரு காலத்தில், சாணிக்கு அதிக மதிப்புக் கொடுப்பது பற்றிப் படித்த ஒருவர்முன் நான் பரிகாசம் செய்தேன். அப் பொழுது அவர் "சாணியானது வியாதிக்குரிய பூச்சிகளைக் கொல்லும் சக்தியுடையதல்லவா?" என்று கேட்டார். இப் படிக் கேட்டதானது, பூச்சிக்கும் சாணிக்கும் உள்ள சம்பந்தத் தைச் சிறிதும் ஆராயாமல் கேட்ட கேள்வியாகும்.

மற்றொரு சமயம், கிரஹணத்தைப் பற்றி நான் பேசும் போது, "சூரிய, சந்திர கிரஹணங்கள், நிழல்களின் காரணமா கத் தோன்றுகின்றன" எனறு சொன்னேன். அப்பொழுது வான சாஸ்திரம் படித்த ஒரு பார்ப்பனர், உடனே கோபங் கொண்டு, "அப்படியானால் பெரியோர்கள் எழுதி வைத்தி ருக்கிற இராகு, கேது சம்பந்தமான விஷயங்கள் எல்லாம் பொய் என்று சொல்லுகிறாயா?" என்று என்னைக்கேட்டார்.

மற்றொரு சமயம், சிராத்தத்தில் கொடுக்கப்படும் பொ ருள்கள் யாவும் எங்கே போகின்றன? என்று கேட்டேன். உடனே "இம்மாதிரி கேட்பதெல்லாம் மேல் நாட்டு காகரீகத் தின் பலனல்லவா?" என்று ஒரு வைதிகர் கோபித்துக்கொண் டார்.

இப்படியே அனேக விஷயங்கள் சிறிதும் பகுத்தறி வுக்கும், அனுபோகத்தும் ஒவ்வாத முறையில் கடைபெற்று வருகின்றன.

ஒரு மனிதன், தன்னை "இந்து" என்று சொல்லிக் கொண்டிருக்கும் வரையில், தனது அறிவைப்பறி கொடுத்து

விட்டு, மூட நம்பிக்கைக்கு ஆளாகி, புரோகிதனுக்கு அடிமையாகவே இருந்து தீரவேண்டும்.

நாம் உண்மையான விடுதலை பெற்றுப் பகுத்தறிவுடன் வாழவேண்டும் என்று கருதினால், இந்து மதத்தைப் பகுதி பகுதியாகத் தாக்கிக் கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப்பதினால் ஒரு பயனும் உண்டாகாது.

இந்து மதம் என்பதையே அடியோடு தகர்த்தெறிந்தால் ஒழிய, நாம் முன்னேற முடியாது என்பதை உணருங்கள்.

இந்துமதத்திற்கு ஆதாரமாயிருக்கும் மற்றொரு விஷயத்தையும் சொல்லுகிறேன்.

பிசாசுகள், ஆன்மாக்கள், இறந்தபின் அடையும் வாழ்க்கைகள் ஆகிய இவையெல்லாம் இந்து மதத்திற்கு அடிப்படையானவைகள்; இவை புரோகிதர்களுக்கு ஆதிக்கத்தை அளிக்கக்கூடிய கட்டுப்பாடுகளாகும்.

ஆன்ம நம்பிக்கையானது, எல்லாவித மூட நம்பிக்கைகளையும் விட, முழு மூடத்தனமானதோடு மூடத்தனத்தை மேலும் மேலும் விர்த்தி செய்வதற்கும் ஆதாரமானதாகும்.

எவனொருவன் ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளுகிறானோ, அவன் தனது சரீர இம்சையைப்பற்றிக் கவலைப்படமுடியாது. மற்றவர்களுடைய சரீர இம்சையைப்பற்றியும் அப்படியே.

உடல் வேறு, ஆத்மா வேறு என்று பிரிவு படுத்த, விஞ்ஞான சாஸ்திரத்தில் இடமில்லையென்று அனேக விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகின்றனர். மனிதனுக்கு ஆத்மாவினிடத்தில் உள்ள நம்பிக்கையே அதிக ஆசைக்கும் இடங் கொடுக்கிறது. ஆன்ம நம்பிக்கை இல்லாவிட்டால், மக்களுக்குக் கடவுள் சம்பந்தமான மூட நம்பிக்கை கூட ஏற்பட நியாயம் இல்லை. ஆத்மா ஒன்று இருப்பதாகக் கருதுவதாலேயே, செத்தபிறகு ஏதோ கடப்பதாக கருதுகின்றான். அப்பொழுது அந்நடவடிக்கை ஏதோ ஒரு கடவுளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமுள்ளவனாகின்றான்.

ஆன்ம நம்பிக்கையானது, சுவர்க்கம், நரகம், தலைவிதி, கடவுள் தயவு, முன் பிறப்பு, பின் பிறப்பு, பிராயச்சித்தம், கர்

மம், பாதுகாப்பு முதலியவைகளை ஏற்படுத்திவிடுகின்றது; இவைகளைப் பற்றிக் கவலைப்படுவதையே மனிதனுடைய கடமையாகவும் ஆக்கிவிடுகின்றது.

ஆன்ம நம்பிக்கையுள்ள இந்துக்களின் குடும்பங்களில் யாரேனும் நோய்வாய்ப்பட்டால், சாகும் வரையில் அவர்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகளைப்பற்றி, அவர்கள் கவலைப்படவேண்டியதில்லை என்று கருதி அவர்களுடைய விதியின்மீது பழியைப்போட்டுப் பேசாமல் இருந்துவிடுவார்கள்.

அவர்கள் இறந்தபின்னர், அவர்களுடைய ஆன்மாவை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையில் அளவு கடந்த முயற்சி எடுத்துக்கொள்ளுகின்றனர்; அதற்காக பயனற்ற செலவுகளும் செய்து வீண் காலம் போக்குகிறார்கள்.

கற்களையும், மரங்களையும், பிசாசுகளாகவும், பூதங்களாகவும், கடவுள்களாகவும வணங்கும் மூட பக்தி, அறியாமை ஆகியவைகள் ஒழியவேண்டுமானால், ஆன்ம நம்பிக்கையென்பது அடியோடு அழிந்தாகவேண்டும்.

இன்றைய தினம் இந்துக்களின் கடவுள்கள் என்று சொல்லப்படுபவைகளில் பல, உயிருடனிருந்து மாண்டுபோன்வர்களின் ஆத்மாக்கள் என்று சொல்லிக்கொள்வதைக் கேட்கிறோம்.

எல்லா மதங்களிலும் ஆன்மா சம்பந்தமான பிராயச்சித்தங்கள், பாவ மன்னிப்புகள், தீர்ப்பு காட்கள், ஆத்ம தினங்கள் (All Sovals' Day) முதலிய மூட நம்பிக்கைகள் இருந்துகொண்டுதான் வருகின்றன.

ஆத்மாவே இல்லையென்றும், கடவுள் சிருஷ்டியே இல்லையென்றும, மக்களுக்கு விளக்கிக் காட்டவந்த புத்த தருமங்களைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளுகின்ற மக்களிடத்திலும ,"பிட்சுக்கள்" என்று சொல்லிக்கொள்ளுகிற பௌத்த புரோகிதர்கள் தரகு வாங்கிக்கொண்டு ஆத்ம சாந்தி செய்யப் புறப்பட்டுவிட்டார்கள் என்றால், மூட நம்பிக்கைக்கு ஆத்ம நம்பிக்கை எவ்வளவு ஆதாரமாயிருக்கிறதென்பது விளங்கும்.

கருச்சிதைத்த கடவுளர்.

(சோதனை விளக்கு)

புராணம் உண்மை; இதிகாசம் உண்மை; எழுதிவைத்த ஏடெல்லாம் உண்மை என்று சில அசடுகள் சொல்லுகின்றன.

ஒன்றும் விளங்காமல் இருட்டில் கிடந்துகொண்டு, அவையெல்லாம் உண்மை என்று கூறி இடர்ப்படுவார்க்கு "சோதனை விளக்கு" போட்டுக்காட்டினால் கலமாக இருக்கும் அல்லவா?

இதைப் பொறுமையாகப் படியுங்கள்! கோபப்படாதீர்கள்! புராணங்களைக் கிளறினால் குப்பையைத்தவிர வேறில்லை என்பது என்வார்த்தை அல்ல. நான் அதிலேயே காலத்தைக் கடத்தப்போவதுமில்லை, ஆனால் மாதிரிக்குக் கொஞ்சம் காட்டுகிறேன்.

"காஞ்சிப் புராணம்" என்று காஞ்சித் தலபுராணம் ஒன்று இருக்கிறது; இதனைப் பாடியவர் லேசான ஆள் அல்ல; மகா மகா மகிமைபெற்ற சிவஞான யோகிகள் ஆவார். அப்பெரியார் திருவாய் மலர்ந்த காஞ்சிப்புராணத்தில் "கடவுளை"யும், கலவியையும் படுத்தியிருக்கும் பாடும், ஆபாசமும் எப்படியிருக்கிறதென்பதற்கு ஓரே ஒரு "சாம்பிள்" தருகிறேன்.

காஞ்சிப்புராணம் சுரகரீசப் படலம் பாட்டு 27.

".....கந்தனை கல்கவேண்டிச்,
சீரிமயத்து மடப்பிடியைத் திருமணஞ் செய்தபின்
எய்தி அங்கண்,
ஏரியல் அந்தப்புரத்தின் மன்னி இன்பக்கலவி
நடத்தலுற்றான்."

பொருள்:— "பரமசிவன், கந்த சுவாமியைப் பெறுவதற்காகப் பார்வதியைக் கல்யாணம் செய்துகொண்டு அந்தப்புரத்திலே இன்பக்கலவி நடத்த ஆரம்பித்தார்" என்று இப்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது.

அடுத்த பாட்டில்,

"வண்டிமிர் கூந்தல் இமயவல்லி வனமுலை தாக்க
மகிழ்ந்து புல்லிக்,

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றுப்பன்னாள்
கலவிப் பெருநலம் துய்க்கும் காலை,
அண்டர் உணர்ந்து வெருவி அஞ்சி அம்பிகை
தம்பால் கருப்பவீறு,
கொண்டிடு முன்னம் சிதைவு செய்யும் கொள்கையின்
அங்கியை ஏவினார்கள்.

இதன் பொருள்:— வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பார்வதியின் அழகிய தனங்கள் அழுந்துவதனால் மகிழ்ச்சியை யடைந்து கட்டித்தழுவி, அவளைக் கண்டும், இசைகேட்டும், அதரபானம் உண்டும், உயிர்த்தும், கட்டிப் பிடித்தும் பல நாள் தொடர்ந்து கலவியாகிய இன்பத்தைப் பரமசிவன் நடத்தினார். அதனைத் தேவர்கள் அறிந்து, நடுங்கிப் பயந்து அம்பிகை வயிற்றில் கருப்பம் முற்றுவதற்கு முன்னால், அதைச் சிதைத்துவிடவேண்டும் என்று கருதி, அக்கினி பகவானை ஏவி விட்டார்கள் என்பது.

ஆகவே அறிஞர்கள் இந்த இரண்டு பாட்டையும் கவனிக்கவேண்டும். சுப்பிரமணியனைப் பரமசிவன் பெறவேண்டுமானால் நினைத்தால் முடியாதா? ஒரு பெண்ணைக் கலியாணங்கட்டிப் பல நாள் தொடர்ந்து கலவி செய்துதானா பிள்ளை பெறவேண்டும்? அப்படிபட்ட கலவியையும் ஒரு மணி நேரம் செய்தால் போதாதா? பல நாள் விடாமல் செய்யவேண்டுமா? அப்படிச் செய்து கந்தக்கடவுளை உண்டாக்க வேண்டும் என்று பரமசிவன் முன்வந்து மும்முரமாக நிற்கும் போது, அதனால் உண்டாகும் கருப்பத்தை அழிக்க மற்ற தேவரெல்லாம் கூடி முயற்சிக்கலாமா? கர்ப்பத்தை அழிப்பது ஒழுங்கா? அதிலும் பார்வதியின் கர்ப்பத்தை அழிக்கத் தேவர்கள் முன்வரலாமா? இது தேவர்கள் செய்யக்கூடிய காரியமா? இப்போதைய வெள்ளைக்காரர் ஆட்சியில் இந்தத் தேவர்கள் இருந்து, இப்படிக் கருப்பத்தைச் சிதைவு செய்தால் பெருந் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

பரமசிவனும், பார்வதியும் கலவிசெய்த மாதிரியை ஒரு யோகீஸ்வரர் விளக்கிக் கூறுகிற முறை கவனிக்கத்தக்கது. இனி கதையைக் கவனிப்போம்.

அக்கினி பகவான் போய்ப் பார்த்து சந்தர்ப்பம் நன்றாக இல்லையென்று திரும்பி தேவர்களிடம் வந்து,

ஷை பாட்டு 29.

"நீவிர்களே அவணெய்தி உளறுநிகழ்த்திடுமின்
கள் எனக்கரைந்தான்"

இதன் பொருள்: — நீங்களே அந்த இடத்திற்குச் சென்று கருவை அழித்துக்கொள்ளுங்கள்! என்றான்.

உடனே அரி, அயன் முதலிய தேவரெல்லாம் புறப்பட்டு, மந்தரமலையில் நின்று கும்பிட்டுக் கதறினார்கள். உடனே அதனை உணர்ந்து,

ஷை பாட்டு 30.

"தெரிவையோடு ஆடும் புணர்ச்சி நாப்பண் சென்றனன்
வெற்றரையோடும் அங்கண்"

இதன் பொருள்:— பரமசிவன் பார்வதியோடு புணர்வதிலிருந்து இடையில் பிரிந்து அம்மணமாகப் புறப்பட்டு வந்தான்" என்பது. இதோடு யோகீசுவரர் நிற்கிறாரா? இல்லை.

ஷை பாட்டு 35.

"வேண்டுவ கூறுமின் உங்கட்கு இன்னே மேவர
நல்குதும் என்று அருள,
ஈண்டிய மாயனை உள்ளிட்டோர்த்தம் எவலினால்
முகன் ஏத்தி எந்தாய்,
மாண்டமலை மகள்பால் கர்ப்பம் வாய்ப்பது
வேண்டிலர் மால்முதலோர்;
காண்ட கவந்தனர்மேல் இயற்றும் கடன் அறியேங்கள்
எனக்கரைந்தான்"

இப்பாட்டில் பரமசிவன் "உங்கட்கு என்ன வரம் வேண்டும்? இப்பொழுதே தருகிறேன்" என்று சொல்ல, மகாவிஷ்ணு முதலியோர் பார்வதி வயிற்றில் கர்ப்பம் வருவதை விரும்பவில்லை', என்றனர். இதைக்கேட்ட பரமசிவன், அப்படியானால்,

ஷை பாட்டு 36.

"பனித்த முத்துருக்கி யன்னவெண் புனல்பருகுமின்கள்,
எனப்புகன்றருளவல்லே எரி இறை அங்கை ஏற்றான்"

"குளிர்ந்த முத்தை உருக்கினாற்போன்ற வெண்மையான தனது இந்திரிய நீரைக்குடியுங்கள்" என்று சொல்லி வெளியே

விட்டார் பரமசிவன். அதனை அந்தக்ஷணத்தில் கையை யேந்தி வாங்கினான் அக்கினி பகவான்.

ஷை பாட்டு 37.

"எண்ணறும் வருடங்காறும் ஆயிரம் இரவிப்பொற்பின்,
அண்ணல்பால் நின்று வீழும் அதனை அவ்வனலோன்
உண்ண,
விண்ணவர் எவர்க்கும் அந்நாள் மேவரும் கர்ப்பம்
நீட்டித்,
துண்ணெனத் துளங்கி வெப்பு நோயினில்
தொடக்குண்டார்கள்.

இதன் பொருள்:— எண்ணமுடியாத வருஷமாக ஆயிரம் சூரியனின் தன்மையைப் பெற்றுப் பரமசிவனிடத்திலிருந்து, பெருகி விழுகின்ற அந்த இந்திரியத்தை உண்டவுடன் தேவர்கள் யாவரும் கர்ப்பத்தை யடைந்தார்கள். மேலும் அதனுடைய உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் வெப்பு நோயினால் கஷ்டத்துக்கு ஆளானார்கள்.

பரமசிவன் பாதியில் பிரிந்து நிர்வாணமாக வந்து, தேவர் வேண்டுகோளுக்கு இணங்கி அக்கினி பகவான் கையில் இந்திரியத்தை வார்த்தார் என்றும், அதனைக் குடித்து ஆண் தேவர் எல்லாரும் கர்ப்பங்கொண்டு பிள்ளைபெற வழியில்லாமல் துயரப்பட்டார்கள் என்றும், இந்தப்படியெல்லாம் ஒரு யோகீசுவரர் எழுதலாமா?

இதனைத்தானே ஆணும், பெண்ணும் கூடியிருக்கச் செய்து கோயில்களிலும், மடங்களிலும் சாம்பல் பக்தர்கள் படிக்கின்றனர். இதனைக்கேட்கும் ஜனங்களுக்குப் பக்தியா வரும்? என்ன உணர்ச்சி வரும்? என்று யோசித்துக்கொள்ளுங்கள்! இப்படியே ஒவ்வொரு புராணத்திலும் எழுதிவைக்கப்பட்டுப் படித்துச் சுண்டல்கடலையும், வடையும் கொடுத்துக் கேட்கச்செய்கின்றனர். ராமாயணம் படித்துச் சீதாக் கல்யாணத்தன்று, தாலி செய்து கட்டி, கல்யாணத் திருவிழா கடத்துகிறமாதிரி, இந்தத் திருவிழாவையும் கடத்த முன் வராமற்போனதே சந்தோஷம் அல்லவா? இந்தத் திருவிழாவையும் கடவுள் திருவிளையாடலாகச் செய்துகாட்ட பக்தர்கள் தயாராய் இருப்பார்கள். அதற்குள் சுயமரியாதைக்காரர்கள் வந்து விட்டார்கள். அப்படிக்கில்லாமல் இன்னும் சில ஆண்டுகள் மக்களைச் சவர்கள் வசத்திலேயே

விட்டிருந்தால், கட்டாயம் இந்த "லெவ" ஐக்கு மக்களைக் கொண்டுவந்து விட்டிருப்பார்கள். ஆனாலும் இன்றும் கோவில்களில் படுக்க வீடு வைத்திருக்கிறார்கள் என்றாலும், நல்ல வேளையாய் பிள்ளை உண்டாக வில்லை.

நிற்க, நமது சிவஞான யோகிஸ்வரர் இந்த அளவோடாவது விட்டாரா? இல்லை! இல்லை!! இன்னமும் மேலேபோகிறார்.

ஷை பாட்டு 40.

"சுரகரீசத்தின் பாங்கர்ச்சுரகர தீர்த்தம் உண்டால்,
விரவிநீர் படிந்தோர் பாவவெப்புநோய் முழுதும்
நீங்கும்,

இரவி நாட்கழிய நன்றாம் நீர் அவண் எய்தி நம்மைப்,
பரவி நீராடில் இந்த வெப்புநோய் பாறும் காண்மின்"

ஷை பாட்டு 41.

"ஆயிடை நீங்கிப்பின்னர் மேருவை அணுகி அங்கண்;
மேய இக்கர்ப்பந்தன்னை விடுமின்"

இதன் கருத்து:— காஞ்சீபுரத்தில் சுரகர தீர்த்தம் என்று ஒன்று இருக்கிறது. அதில் குளித்தவர்கள் இம்மாதிரி உஷ்ணநோயை விட்டு நீங்குதல் கூடும். நீங்கள் போய் அதில் குளியுங்கள். அப்பால் அங்கிருந்து மேரு மலைக்குச்சென்று, அங்கே உங்கட்கு உண்டாயிருக்கும் கர்ப்பத்தை விடுங்கள்" என்று பரமசிவன் சொன்னார். அப்படியே தேவர்கள் செய்தனர்.

இப்பொழுது இந்தக்கதை எதற்காகக் கட்டப்பட்டதென்பது விளங்கும். ஒன்று, மகாவிஷ்ணு முதலிய தேவர்களைக் கேவலப்படுத்த வேண்டும் என்பது. மற்றொன்று, காஞ்சீபுரத்திலிருக்கும் சுரகரீசம் என்னும் குளத்துக்குப் பெருமை கூறவேண்டும் என்பது. இந்த இரண்டு நோக்கத்தினால் 'கடவுள் தன்மை'யையும், பகுத்தறிவையும் இழந்து மிகமிகக் கேவலமான முறையில் கதை கட்டி, கடவுள் தன்மையை, காமங்கொண்டலையும் மனிதனையும், மிருகத்தையும்விடக் கேவலமாக எழுதித் தள்ளிவிட்டார். வெகுநாள் தொடர்ந்து கலவி செய்வதும், கலவியன் இடையே பிரிந்து நிர்வாணமாக வந்து முப்பத்துமுக்கோடி தேவர்கட்கு முன்னால் கடவுள் மானமின்றி நின்றதும், கடவுள் தன் இந்திரியத்தை தேவர்கள் கையில் வார்த்ததும், அதை தேவர்கள் வாங்கிக்குடித்ததும்

இதை ஒரு யோகீசுவரர் பாடி இருப்பதும் கவனிக்கத்தக்கது. இத்தப்பரிதாபகரமான புராணங்களைப்பற்றிக் குறைசொல்லாமல் எப்படியிருக்க முடியும்? இதைப்படித்த ஒருவன், கடவுள் திருவாக்கென்று எப்படிப்பொறுக்கமுடியும்? பத்து சைவப்பெண்களை வைத்துக்கொண்டு, இந்தப்புராணத்தை ஜனங்களுக்குப் படித்துக்காட்டினால் எப்படி இருக்கும்? இப்படிப்பட்ட புராணங்களை வைத்துக்கொண்டு "புராணங்கள், கடவுள் வாக்குகள்; ஒன்றையும் பொய்யென்று சொல்லாதே! அதன் கதைகளை ஆபாசமென்றால் உடனே பாபம் வரும். அவற்றை மறுத்துச்சொல்பவன் நாஸ்திகன்! ஆவான்; அவன் பேச்சைக் கேளாதே" என்று சொல்லும் சைவப் பண்டிதர்களின் கூற்று யோக்கியமானதா? என்று கேட்காமலிருக்க முடியுமா? எத்தனைநாளைக்குத்தான் இந்த நாற்றத்தைக் கட்டியழுவது?

இந்தப்புராணத்தைத் தான் தமிழில் பாடும்படி, காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் சிவஞான யோகீசுவரருக்குச் சொல்லியருளினாராம்! கருச்சிதைக்கிற படலத்தையும், கருச்சிதைக்கிற குளத்தையும் பற்றிக் "கடவுள்" எதற்காகப் புராணம் பாடச்சொன்னார் என்பது யோசிக்கத்தக்கதல்லவா?

விதவைகளுக்கு விவாகமில்லாமற் செய்துவிட்டதால், அவர்கள் ஒரு சமயம் கர்ப்பம் அடைந்தால் இரகசியத்தில் மூழ்கி அழித்துக்கொள்ளட்டும் என்பதற்காகவா? சிவபக்தர்கள் செய்யும் விபசார தோஷத்தால் ஏற்படும் கர்ப்பங்களை அழிக்க வசதியாக இருக்கட்டும் என்றா? இவைகளையெல்லாம் சிறிது பகுத்தறிவைக்கொண்டு பார்த்தால், கடவுள் பேரால் எவ்வளவு பித்தலாட்டங்களும், கொடுமையும், அசிங்கமும் நாட்டுக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும். இவற்றை ஒழிக்கவேண்டும் என்று சொன்னால் பண்டிதர்களும், சிவ பக்தர்களும் சீறி விழுவதில் என்ன பிரயோசனம்? இதைப்பார்த்த வேறு மதக்காரர்கள், நம்மை இழிவாகக் கருதுகிறார்கள் என்று சொன்னால், "அவர்கள் மதத்திலும் இப்பேர்ப்பட்ட ஆபாசமும், அசிங்கமும் இருந்து வரவில்லையா" என்று சொல்லி அவற்றிலும் இரண்டு துற்நாற்றங்களைக் காட்டிவிட்டால் நமது மதமும், கடவுளும் வாசனை பெற்றுவிடுமா என்று கேட்கின்றேன்.

சைவர்கள் இதற்கு ஏதாவது தத்துவார்த்தம் இருந்தால் வெளிப்படுத்துவார்களாக.

கடவுள்?

என்ன சமாதானம்? ஈ. வெ. ரா.

கடவுள் என்ற வார்த்தை ஒரு குறிப்பற்றதாய் இருந்து வருகிறது.

கடவுள் என்ற வார்த்தை தோன்றி எவ்வளவு காலம் இருக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது.

அப்படியிருந்தும் கடவுள் என்றால் என்ன? என்று இன்று எப்படிப்பட்ட ஆஸ்திகராலும் சொல்லமுடிவதில்லை. ஆகவே ஒவ்வொரு ஆஸ்திகனும், தனக்குப் புரியாத ஒன்றையே-தன்னால் தெரிந்துகொள்ள முடியாததும், பிறருக்கு விளக்க முடியாததுமான ஒன்றையே, குருட்டுப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு கடவுள் கடவுள் என்று கட்டி அழுகிறான்.

கடவுளுக்கு லக்ஷணமோ, இலக்கியமோ, குறிப்போ ஏதாவதொன்று விளக்கமாய்ச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால், இவ்வளவு காலத்துக்குள்ளாக கடவுள் சங்கதியில் இரண்டிலொன்று, அதாவது உண்டு, இல்லை என்கின்ற ஏதாவது ஒரு முடிவுக்கு உலக மக்கள் வந்திருப்பார்கள்.

கம்பர்கூட சீதையின் இடையை வர்ணிக்கும்போது, "சீதையின் இடையானது கடவுள்போல் இருந்தது" என்று வர்ணிக்கிறார். அதாவது கடவுள் எப்படி "உண்டோ, இல்லையோ" என்பதாகச் சந்தேகப்படக்கூடியதாய் இருக்கின்றதோ, அதுபோல் சீதையின் இடையானது கண்டுபிடிக்கமுடியாத அவ்வளவு நுண்ணியதாய் இருக்கிறது. என்று கூறினார்—

கம்பரை நாஸ்திகர் என்று யாரும் சொல்லமாட்டார்கள்.

மக்களும் பெரும்பாலோரும் ஆஸ்திகர்கள் எல்லோரும், தங்கள் குற்றங்களுக்கும், தங்கள் துற்குணங்களுக்கும், தங்கள் தரித்திரத்திற்கும், துன்பத்துக்கும் தாங்களே காரணமென்று வருந்தி அவற்றைப்போக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள்.

இந்துக்கள், கடவுளை ஒரு மனிதனைப்போலவே கற்பித்துக்கொண்டு அதிலும் ஒரு செல்வம்பொருந்திய மனிதனாய்க்

கற்பித்துக்கொண்டு, அதற்கு மனிதனைப் போலவே வீடு, வாசல், பெண்டு, பிள்ளை, பல பெண்டு, பல வைப்பாட்டி, உடை, ஆகாரம் வாகனம் ஆகியவைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

மற்ற கிறிஸ்து, முஸ்லீம் ஆகிய மதஸ்தர்களுக்கும் கடவுளை மனிதன் போலவே கற்பித்து, அக்கடவுளுக்கு நன்மை, தீமை, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கோபம் ஆகிய குணங்களைக் கற்பித்து தன்னை வணங்கினவனுக்கும், தன் இஷ்டப்படி நடந்தவனுக்கும் நன்மையளிப்பதும், தன்னை வணங்காதவனுக்கும், தன் இஷ்டப்படி நடக்காதவனுக்கும் தீமை அளிப்பதுமான குணத்தைக் கற்பித்திருக்கிறார்கள்.

சர்வ சக்தியுடைய பூரணத்தன்மை பெற்று, எங்கும் நிறைந்திருக்கிற ஒருகடவுளுக்கு மோக்ஷம் நரகம் எதற்கு?

கடவுள் இஷ்டத்துக்கு விரோதமாய் நடக்கும்படியான சந்தர்ப்பம் மனிதனுக்கு எப்படி வரும்?

உலகத்தில் தீமை எப்படி உண்டாயிற்று? அதை யார் கற்பித்தார்கள்? தீய குணம் மனிதனை அடையக் காரணமென்ன?

தீயதைச்செய்துவிட்டுக் கடவுளை வணங்குவதாலோ, பிரார்த்திப்பதாலோ அதன் பயன் எப்படி அதிகரிக்கப்பட்டு விடும்? தீமையினால் துன்பம் அடைந்தவனுக்குப் பரிகாரம் எப்படி ஏற்படும்? தீமை செய்தவர்கள் கடவுளை வணங்கிப் பிரார்த்திப்பதின் மூலம், தீமைக்குண்டான பலனை அனுபவிக்கமுடியாமல்போய்விடுவார்கள் என்றால், தீமை எப்படி? எப்பொழுது? உலகைவிட்டு அகல்வது?

எத்தனையோ கோடிக்கணக்கான வருடங்களாகக் கோடிக்கணக்கான மக்கள் தீமைக்காக மன்னிக்கப்பட்டும், தீமைக்காகத்தண்டிக்கப்பட்டும், உலகில் இன்றும், நாளையும், இனியும் வெகு காலத்துக்கும், தீமை இருந்துகொண்டே வருகிறது என்றால் இதுவரையும், தண்டனையும் மன்னிப்பும் என்ன பலனைக்கொடுத்துவந்திருக்கின்றன?

தீமையின் கொடுமையை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்கு என்னதான் வழி?

தீமையைச் செய்தவன் மன்னிப்பு பெற்றோ, தண்டனை அடைந்தோ, தன் செய்கைக்குப் பரிகாரம் பெற்றுக்கொள்ளுகிறான் என்றே வைத்துக் கொள்வோம்.

தீமையை அடைந்தவனுக்கு இந்தக் கடவுள் எனன பரி காரம் செய்கிறார் என்பது விளங்கவில்லை.

தீமையை அடைகின்ற மனிதன், கடவுள் சித்தத்தால் தான் தீமை அடைகிறான் என்றுதானே சொல்லவேண்டும்? அப்படியில்லாவிட்டால், கடவுளின் கர்வலை மீறி, ஒரு மனிதனுக்கு ஒரு மனிதன் தீமை செய்துவிட முடியுமா?

ஆகவே கடவுள் சித்தத்தால் ஒரு மனிதன் தீமையை அடைகிறான் என்றால், பிறகு தீமை செய்தவனுக்குத் தண்டனை எப்படி வரும்? அவன் எதற்காக மனிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும்?

கடவுள் சித்தமில்லாமல், தனிப்பட்ட முறையில், தன் சொந்தத்தில் ஒரு மனிதன் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்து விடமுடியுமா?

கடவுள், மனிதன் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை கடத்துகிறார் என்பதே பெருமித ஆஸ்திகர்கள் முடிவு. அதனாலேயே பிச்சை பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உத்தியோகம் பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொல்லுகிறான். உதவி பெற்றவனும், கடவுள் கொடுத்தார் என்று சொலலுகிறான். எதாவது ஒரு கூட்டத்தில் நெருக்கடியில் இருந்து தப்பித்துக்கொண்டவனும், கடவுள் தப்பித்துவிட்டார் என்று சொல்லுகிறான்.

ஆகவே எந்த நன்மைக்கும், தீமைக்கும் மனிதன்மீது பொறுப்பைச் சுமத்துவது எப்படி முடியும்?

அன்றியும் கடவுள் சர்வவியாபியாய் இருக்கும்போதும், மனிதனுடைய ஒவ்வொரு எண்ணங்களையும், காரியங்களையும் கவனித்துவருகின்றவராய் இருக்கும்போதும், மனிதனுக்குத் தனிப்பட்ட பிரார்த்தனை எதற்கு? அதற்காக இடம், பொருள், கோம் எதற்காகச் செலவு செய்யவேண்டும்?

அவர் தெரிந்துகொள்ள முடியாத எந்தக்காரியத்தைப் பிரார்த்தனையினாலும், ஜபத்தினாலும், தொழுகையினாலும் அவருக்கு அறிவிக்க முடியும்? பிரார்த்தனைக்கும், ஜபத்துக்கும் இறங்குகிறவர் என்றால், கடவுள் தற்பெருமைக்காரரா-அல்லது பிரதிப்பிரயோஜனம் பெறும் வியாபாரமுறைக்காரரா?

இவ்வளவுகாலப் பிரார்த்தனையும், ஜபமும், தொகையும் மனிதனை எதாவது ஒருவழியில் யோக்கியமாய் கடப்பதற்குப் பயன்பட்டிருக்கிறதா?

நன்மைக்கும், தீமைக்கும் கடவுளே கர்த்தராய் இருக்கும் போது, உலகில் நன்மை, தீமை இல்லாமல் இருக்கச்செய்யமுடியாதா? அதை எவராவது சில மக்கள் அடைந்துதான் தீர வேண்டுமா?

அன்றியும் நமது பிரார்த்தனையும், தொழுகையுமாவது நமக்குத் தீமை அணுகாமல் செய்யமுடியுமா? அப்படிச்செய்தாலும், அத்தீமை உலகில் உள்ளவரை ஏதாவது ஒரு மனிதனையாவது அணுகித்தானே தீரவேண்டும்?

ஆகவே மனித சமூகம், பொதுவில் தீமையில் இருந்து எப்படித்தப்ப முடியும்?

தீமையினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்பதைக் கடவுள் அறிந்திருக்க மாட்டார் என்று யாராவது நம்ப முடியுமா?

அப்படி இருக்கும்போது, சர்வ சக்தியும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள், உலகத்துக்குத் தீமையை ஏன் சிருஷ்டித்தார்?

விஷப்பூச்சி, விஷக்கிருமி, விஷரோகம், தரித்திரம், துன்பம், கொலைத்தொழில், கொள்ளைத்தொழில், திருட்டு, பொய், வஞ்சகம், விவசாரம், கஷ்டமானவேலை, அடிமைத்தனம், கொடுங்கோல் ஆட்சி, ராஜத்துரோகப் பிரஜைகள், கடவுளை மறுப்பது, கடவுளை வைவது, முதலாகிய தீமை என்னும் விஷயங்களையெல்லாம் கடவுள் ஏன சிருஷ்டித்தார்?

இவற்றால் யாராவது ஒருவர் கஷ்டப்படுகிறாரா—இல்லையா? இவற்றால் கடவுளுக்கு என்ன லாபம்?

பூகம்பம், எரிமலை வெடிப்பு, புயல் காற்று, கடு மழை ஆகிய காரியங்களை ஏன் சிருஷ்டித்தார்?

கெட்ட மனிதர்கள் துன்பமனுபவிக்க என்று சொல்லப்படுமானால், கெட்ட மனிதர்களை ஏன் சிருஷ்டித்தார்?

கல்ல மனிதன், கெட்ட மனிதன் என்று சொல்லமுடியாத குழந்தைகள், மற்ற ஜீவன்கள் ஆகியவைகளுக்கும் துன்பத்தை அனுபவிக்க ஏன் செய்தார்?

இவைகளுக்கெல்லாம் சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சர்வதயாபரத் தத்துவமும் உடைய ஒரு கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்து நடத்தி வருகிறார் என்று சொல்லும் ஆஸ்திகன் என்னபதில் சொல்லக்கூடும்?

இத்தகைய கேள்விகள் வெகுகாலமாகவே இருந்து வருகின்றன என்று பதில் சொல்லிவிட்டால் போதுமா?

குடி அரசு வெளியீடுகள்.

8-அணா வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள் (Dr. R. P. பாஞ்சிபை.)
இராமாயண ஆராய்ச்சி 2-ம் பாகம் (சுந்தரசேகரப் பாவலர்)
கைவல்ய சாமியாரின் கட்டுரைகள், (கைவல்யம்)

4-அணா வெளியீடுகள்.

இராமாயண ஆராய்ச்சி 1-ம் பாகம் (சுந்தரசேகரப் பாவலர்)
லெனினும் மதமும்.
விவாஹ விடுதலை (K. M. பாலசுப்ரமண்யம்)
கடவுளும் பிரபஞ்சமும் (M சிங்காரவேலு)
பங்கஜம் or பார்ப்பனக்கொடுமை
சுதந்தரப் போர்

3-அணா வெளியீடுகள்.

பொது உடமைத் தத்துவங்கள்
தர்ம பரீக்ஷை
மேயோ கூற்று மெய்யா பொய்யா (C. A. அய்யாமுத்து)

2-அணா வெளியீடுகள்.

சீர்திருத்தம் (ஈ. வெ. ராமின் சொற்பொழிவு)
மனுநீதி விளக்கம் (சிவானந்த சரஸ்வதி)
அகத்தியர் ஆராய்ச்சி (வித்வான் கமச்சிவாய முதலியார்)
இராமலிங்க சுவாமிகள் பாடல்கள்

1-அணா வெளியீடுகள்

போல்ஷிவிக் முறை
பர்னாட்ஷா உபந்யாசம்

½-அணா வெளியீடுகள்

சமதர்ம உபந்யாசம் (M. சிங்காரவேலு)
இலங்கைச் சொற்பொழிவு (ஈ. வெ. ரா.)

இதர பதிப்பக வெளியீடுகள்.

1-ரூபாய் வெளியீடுகள்.

The Crux of the Indian Problem, (Dr. R. P. Pranjibi)
The Right of the temple entry (P. Chidambaram)

8-அணா வெளியீடுகள்.

சிதம்பர ரகசியம் (தென்பாதி கனகசபை)
மாதர் சுதந்தரம் (சாமி சிதம்பரனார்)
நச்சுப்பொய்கை (C. A. அய்யாமுத்து)

6-அணா வெளியீடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ	0 5 0
பிரசுருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

கான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த கன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
கான் சமுசயவாதியானதேன்? ...	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0

அறிஞர் பிரமச்சாரி M A., L. T, எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M சிங்காரவேலு B A., B. L, எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I-ம் பாகம்		0 6 0
ஷை	II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன மெஸ்லியர் எழுதியது

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம்			0 4 0

தோழர் அ ரோகவன் எழுதியது

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''கான்காம் பதிப்பு'') ...		,,	0 5 0
ஷை காலிக்கோ பயின்டு ...		,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் Ltd, ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy for the Rational Books Publishing Society Ltd. at the Unmaivilakam Press, Erode.